www.padippakam.com

# புதிய பார்வை

பார்வை - 5 புரட்டாதி - 1991

யு.என்.பி,சுதந்திரக்கட்சி,ஈ.பி.ஆர்.எல்.எவ். உட்பட 120 எம்.பி. கள் கைச்சாத்திட்டு,

## பிரேமதாசாவுக்கு எதிராகநம்பிக்கையில்லாப் பிரேரணை

சர்வஅதிகாரமும் கொண்ட ஜனாதிபதி பிரேமதாசா மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்படவேண்டுமென, ஆளுங்கட்சியான யு.என்.பி. உட்பட நூற்றி இருபது பாராளுமன்ற உறுப்பினர்களால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட மனுவைத்தொர்ந்துகொழும்பில் அரசியல் நெருக்கடி நிலமைகள் மேலும் விரிவடைந்துள்ளது.

ஜனாதிபதி பிரேமதாசா வேண்டுமென்றே பலவழிகளிலும் அரசியல் யாப்பை மீறியுள்ளார். தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததுடன் பல ஊழல்களுக்கும் காரணமாக இருந்துள்ளார். ஆகவே இவர் தொடர்ந்து ஆட்சியிலிருப்பதற்கான தகமைகளை இழந்துள்ளார் என பாராளுமன்றக் கூட்டத்தொடர் கட்டிடத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அனுராபண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இம்மாநாட்டில் எதிர்கட்சித்தலைவி ஸ்ரீமாவோபண்டாரநாயக்கா, ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர்நாயகம் தோழர். க. பிரேமச்சந்திரன்(சுரேஷ்), நவசமசமாஜக்கட்சி பா.உ. வாசுதேவநாணயக்கார, லங்கா சமசமாஜக்கட்சி பா.உ அத்தாவுட செனிவரத்தின உட்பட மேலும்பலர் சமுகமளித்திருந்தனர்.

அனுரா மேலும் தெரிவிக்கையில், பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களால் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதால், பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரத்தையும் ஜனாதிபதி பிரேமதாசா இழந்துள்ளார். ஜனநாயகம் மேலும் சீர்குலைக்கப்படாமல் இருப்பதற்காகவும்,பெருமளவு மனிதஉரிமைமீறல்களை தடுப்பதற்கும் இவ்விடயத்தால் தனது எதிரிகளென இனங்காணப்படுவோர் அழித்தொழிக்கப்படாதிருக்கவுமே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி, தொழில் அமைச்சர் பிரேமசந்திரா, தொழில்துறை இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனிவரத்னா ஆகியோர் தமது அமைச்சர் பதவிகளை துறந்துள்ளனர். பாராளுமன்றக்கட்டிடத்தில் காமினிதிசநாயக்கா கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில்,தமது நடவடிக்கை இலங்கையில் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்த உதவும் என பதவிகளை துறந்த அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரேமதாசாவுக்கெதிரான இப்பிரேரணையில் முஸ்லீம்காங்கிரஸ்பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப்கிஷ்புல்லாவும், ஈ.பி.ஆர்.எல்.எவ். பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐந்துபேரும் கைச்சாத்திட்டுள்ளனர். ரெலோ பா.உ. திவ்வியநாதன் கைச்சாத்திட்டுவிட்டு பின்பு தான் தெரியாமல் செய்துள்ளதாக மன்னிப்புக்கோரியுள்ளார். இம்மாதம் மூன்றாம் திகதி கூடவிருந்த பாராளுமன்றக் கூட்டத்தொடரை இருபத்திநாலாம் திகதிக்கு ஒத்திவைக்கும்படி ஜனாதிபதி பிரேமதாசா உத்தரவிட்டுள்ளார்.பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான ஆதரவை இழந்துள்ளமையாலேயே பாராளுமன்றக்கூட்டத்தொடரை ஒத்திவைத்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

# வட்டமேசைமாநாடு,சர்வகட்சிமாநாடு

# என்ற அரசஅரசியல் நாடகத்தொடரில்

# இப்போது பாராளுமன்றத் தெரிவுக்குழு

சர்வகட்சிமாநாட்டில் பதின்நான்கு நாட்களில் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணப்படுமென்றும் அதற்கு சட்டவரைவுகுழு தெரிவுசெய்யப்பட்டுள்ளதென்றும் வேறு நாட்டுஆலோசகர்களிடம் ஆலோசனை பெறப்படுமென்றும் அரசு பறைசாற்றியது. இப்போது மீண்டும் இழுத்தடிக்கும் நடவடிக்கையாக பாராளுமன்றத் தெரிவுக்குழு என்றுஒன்றை தூக்கிப்பிடித்துள்ளது.

இனப்பிரச்சனைக்கு எந்தவித உருப்படியான யோசனைகளையும் முன்வைக்காத ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கொண்டுவந்த இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண வழி என்ற பாராளுமன்றத் தெரிவுக்குழு என்னும் பிரேரணையை அரசு தனக்குச் சாதகமாகத்தூக்கிப்பிடித்துள்ளது.இது தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கம்வகுக்கும், அங்கம்வகுக்காத அனைத்துக்கட்சிகளிடமும் கருத்துக்கள் பெறப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இந்திய ஒப்பந்தமோ,மாகாணஅமைப்பு முறையோ, அதிகாரப்பரவலாக்கலோ ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படவில்லை.நேரடியாக பிரேமதாசா பங்கெடுத்துக்கொண்ட சர்வகட்சிமாநாட்டில் இதுவரை எதுவிதஉருப்படியான திட்டங்களும் இனப்பிரச்சனைக்குத் தீர்வுவேண்டி மேற்கொள்ளப்படவில்லை. எப்படி இதிலிருந்து தப்பிக்கொள்ளலாமென. நினைத்த பிரேமதாசா, தான் எந்தத்தீர்வையும் முன்வைக்கவில்லை, தமிழ்,முஸ்லீம் கட்சிகளை தீர்வைமுன்வைக்கச் சொல்லிவிட்டு நழுவிக்கொண்டார். தமிழ்கட்சிகள் முன்வைத்த எட்டு அம்சக் கோரிக்கைகணக்கிலெடுக்கப்படாமல் பிரேமதாசாவால் தட்டிக்கழிக்கப்பட்டது.

இப்போது பாராளுமன்றத் தெரிவுக்குழு எந்தமுடிவை எடுத்தாலும், அதன் இறுதி முடிவைஎடுக்கும் அதிகாரம் சர்வவல்லமைகொண்ட ஜனாதிபதிக்கே உண்டு. நேரடிப் பங்கெடுத்த சர்வகட்சி மாநாட்டில் காலத்தைக் கடத்திய ஜனாதிபதி, பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளுக்கும் இதே முறையை கையாளுவார் என்பதில் ஆச்சரியப்படுவதற்கெதுவுமில்லை.

இனப்பிரச்சனை தீர்க்கப்படமுடியாததோ அன்றி வழிவகைகள் அற்றதோ அல்ல. அரசின் நடவடிக்கைகளானது இனப்பிரச்சனையைத் தீர்க்க அரசதரப்பில் விருப்பமின்மையையே எடுத்துக் காட்டுகிறது.

இனப்பிரச்சனைக்கான தீர்வை அரசதரப்பில் இதுவரை முன்வைக்கப்படாததோடு, தமிழ்பேசும் மக்களின் சார்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக முன்வைத்த பத்தொன்பது அம்சத்திட்டத்தையும் கணக்கிலெடுக்காதது அரசதரப்பிலான தட்டிக்கழிக்கும் அசமந்தப் போக்கையே சுட்டிக்காட்டுகிறது. இதுவரைஎவராலும் மாற்றுத்திட்டங்கள் எதுவும்முன்வைக்கப்படாதபட்சத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்வைத்த பத்தொன்பது அம்சத்திட்டத்தின்அடிப்படையில் இனப்பிரச்சனைக்கான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும். அதிகாரப்பரவலாக்கலையும், இணைந்த மாகாணசபையையும் உள்ளடக்கிய பத்தொன்பது அம்சத்திட்டத்தின் பரிணாமவளர்ச்சியாக இன்று தமிழ்கட்சிகள் முன்வைத்துள்ள எட்டு அம்சத்திட்டத்தை அரசு கணக்கிலெடுக்காதது ஏன் ?



எமது மக்களுக்கு அமைதி, சமாதானம், சமத்துவம், ஜனநாயகம் கிடைக்கும்வரை, நாம் இறுதிவரை உறுதியுடன் போராடுவோம்

படிப்பகம்

# எமது பார்வையில்

தமிழ்பேசும் மக்களின் இனப்பிரச்சனைக்கு சர்வகட்சிக்குழு ஒன்றைஅமைத்தலின்மூலம் இப்போது ஸ்ரீலங்காஅரசாங்கம் தீர்வு (?)காணப்போகிறதாம் சர்வகட்சிமாநாடு என்ற இழுத்தடிப்பு நாடகம் முடிவடைந்து இப்போது இந்தப்புதிய நாடகம் அரங்கேறுகிறது.

எதிர்கட்சியின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இந்தநடவடிக்கையை மேற்கொள்ளும்,ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் ஜனநாயகம்பேணும் தன்மைக்கு அரச ஊதுகுழல்பத்திரிகைகள் புகழாரம் சூட்டிவருகின்றனர். தம்மைஎதிர்ப்பவரை கொலைசெய்தல், அவர்கள்மீது பொய்வழக்குபோடுதல்,கைதுசெய்து காணாமல்போகச்செய்தல் மற்றும் பயங்கரவாதச்சட்டங்களைக்கொண்டு அனைத்து மக்களின் சகலஉரிமைகளையும் பறித்து அடக்குமுறை ஆட்சி ஒன்றை நடத்துதல் ஆகியவற்றைச் செய்துவரும் ஐ.தே.கட்சிஅரசின் ஜனநாயகம் (?) பேணும்தன்மைபற்றி நாம் மேலதிகமாக எதுவும் சொல்லத்தேவையில்லை.

ஆனால் எம்முடைய ஆதங்கமெல்லாம்... குண்டுகள் வீசப்பட்டு எங்கள் தேசம் கந்தகபூமி ஆக்கப்பட்டபின்பும், பலர் கொன்றொழிக்கப்பட்டும், அங்கவீனர்களாயும் நோயாளிகளாயும் ஆக்கப்பட்டு எங்கள் மக்களின் வாழ்வு அகதி முகாம்களுள்ளும், பங்கர்களுள்ளும் தேங்கிப்போனபின்னரும்... எங்கள்தேச மக்கள் மருந்து, உணவு, மின்சாரம் போன்ற அடிப்படைத்தேவைகள் மறுக்கப்பட்டு இந்த நூற்றாண்டின் மிகமோசமான ஒடுக்குமுறைகளுக்குள்ளான பின்பும்..... இந்தஇனவாதஅரசின் முகமூடிகளைக் கிழிப்பதில் தமிழ்அமைப்புக்களுக்கு ஏன் தயக்கம்?

மாகாண அரசாங்க காலத்தில் புலிகள் மற்றும் ஈரோசினரும் இப்போது மற்ற அமைப்புக்களும் மாறிமாறி அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்குவதும், இனப்பிரச்சனை தொடர்பான அரசின் இழுத்தடிப்பு நடவடிக்கைகளுக்கு துணைபோவதும் எமது மக்களுக்கு செய்யும் மிகமோசமான துரோகமல்லவா? இருப்பைஇழந்துவரும் எமது மக்களின் துயரங்களை அலட்சியம் செய்து வெறுமனே தமது இருப்பை காப்பாற்றமுயலும் இத்தகைய துரோகச் செயல்கள் தமிழ்அமைப்புக்களை மாத்திரமல்ல தமிழ்பேசும் மக்களையும் அழிவுக்கே இட்டுச்செல்லும்.

ஆனையிறவு யுத்தத்தில் அரசு - புலிகள் ஆகியஇருதரப்பினருக்கும் ஏற்பட்ட பெரும்இழப்பு இப்போது இருதரப்பையும் சமாதானத்தைப்பற்றி பேசவைக்கிறது. ஆனால் யுத்தத்திற்கான தயாரிப்புக்களைச் செய்துகொண்டும், எமதுமக்களின் மீது மோசமானஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துக்கொண்டும், மாற்றுக் கருத்தாளர்களின் குரல்வளைகளை நெரித்துக் கொண்டுமே இருதரப்பினரும் சமாதானம் பற்றி பேசுவது வேடிக்கையானதாகும்.

எமதுமக்களை மேலும்மேலும் படுகொலை செய்துகொண்டே... அவர்களது துன்பங்களை நீட்டிக்கொண்டே... அவர்களது இறுதி நம்பிக்கைகளையும் தகர்த்துக்கொண்டேதான் இருதரப்பினரும் இரத்த ருசிகொண்ட நாக்குகளால் சமாதானத்தைப்பற்றி பேசுகிறார்கள்.

அரசு-புலிகள் ஆகிய இந்தஇருதரப்பு ஒடுக்குமுறையாளர்களுக்கும் எதிரான ஒரு கிளர்ந்தெழுதல் இல்லாமல் எந்தப்பிரச்சனையுமே தீரப்போவதில்லை சர்வதேசரீதியாக இந்த இருதரப்பினரும் அம்பலப்படுத்தப் படாமல் இவர்கள் பலவீனமடையப் போவதில்லை.

தம்மை முற்போக்காளர்கள் அல்லது புத்தி ஜீவிகள் என்று சொல்லிக் கொள்வோராயினும்சரி ,அல்லது நடுநிலையாளர் என்று சொல்பவராயினும் சரி, அல்லது தமிழ்பேசும் மக்களின் நலனுக்காக பாடுபடும் அமைப்புக்களைச் சேர்ந்தவரென சொல்பவராக இருப்பினும்சரி, ஏன் வெளிநாடுகளில் வாழும் ஒருசராசரி தமிழ்பேசும் பிரஜையாக இருப்பினும்சரி... இன்று அனைவருக்கும் முன்னால் இருக்கும் பணி அரசு-புலிகள் இருதரப்பினரும் அம்பலப்படுத்தப்படவேண்டும் என்பதேயாகும். மக்களின் எதிர்ப்புணர்வு அரசபுலிகள் தரப்பினருக்கெதிராக கிளர்ந்தெழச் செய்யப்படல் வேண்டும். எமது மக்களின் துன்பங்கள் சர்வதேச சமூகத்தின்முன் கொண்டுவரப்படல் வேண்டும். இதற்கான முயற்சிகளுக்காக எமது சக்திகளைப் பிரயோகிக்க வேண்டும்.

யதார்த்தத்திலிருந்து வேறுபட்டு வெறுமனே சித்தாந்தங்களைஉதிர்தலோ அல்லது முற்போக்கு மகுடம் சூடிக்கொண்டு வெறும் விமர்சனங்களை மாத்திரம் வைத்தலோ அல்லது இன்னமும் புறநானூற்று காவியக்கனவுகளில் மிதத்தலோ எந்த விளைவையும் தரப்போவதில்லை. மாறாக எமதுமக்களின் துன்பங்களைத்தான் அதிகரிக்கும்.

புதியஉலக ஒழுங்குமுறையையும், உலகஅரங்கிலேற்பட்டுவரும் மாற்றங்களையும் அலட்சியம்செய்து யதார்த்தத்துக்கு ஒவ்வாத செயற்திட்டங்களை வகுப்பதைவிடுத்து எமதுமக்களின் துன்பங்களை களைவதற்கு,உரிமைகளைப்பெறுவதற்கு பொருத்தமானமுயற்சிகளில், எமதுமக்களின்பால் அக்கறைகொண்ட அனைவரும் முனைப்புடன் செயற்படவேண்டும்.

## ராஜீவ் படுகொலையும் சயனைட் தற்கொலையும்.

ராஜீவ்காந்தியை கொலை செய்தவர்கள் புலிகள் தான் என்பதை, பொலிசாரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் குடித்து தற்கொலை செய்துவரும் புலிகள் நிரூபித்துவருகின்றனர். முதலில் இருவரும் பின்னர் பன்னிரண்டுபேரும் இறுதியாக ராஜீவ் படுகொலையின் சூத்திரதாரியான ஒற்றைக்கண் சிவராசன் உட்பட ஏழு பேர்என இருபத்தியொரு புலிகள் பொலிசாரின் சுற்றி வளைப்பின்போது தப்பிக்க வழியின்றி சயனைட் குடித்து தற்கொலை செய்துள்ளனர்.

இதுவரை பொலிசாரால் தேடப்பட்டு பிடிபடாமல் வந்த ஒற்றைக்கண் சிவராசன், கொடுத்தவேலையைச் சரிவரச் செய்யவில்லையென புலிகள் தண்டனையாக சிவராசனை தப்பிக்கவைக்க முயற்சிசெய்யாத காரணத்தால் வேறுவழியின்றி புலிகளின் மரபுக்கிணங்க சிவராசனும் அவரது சகாக்களும் சயனைட் தற்கொலையை மேற்கொண்டுள்ளனர். போட்டோகிராபர் ஹரிபாபுவின் படச்சுருள் ஒன்றே பொலிசாருக்கு படுகொலையைத் துப்புத்துலக்கும் விசாரணைக்கு பெரிதும் உதவியது. கொலைநடந்த இடத்தில் போட்டோ படச்சுருளை கைப்பற்றாமல் சிவராசன் தப்பிச்சென்றதாலேயே எல்லோரும் பிடிபட நேர்ந்ததோடு புலிகள் அம்பலமாகவும் வழிவகுத்தது. இதனால் புலிகள் சிவராசனை அம்போஎன்று கைவிட சிவராசன் வேறுவழியின்றி தற்கொலைசெய்து கொண்டார்.

## இந்திய வெளிவிவகாரஅமைச்சரும், ஈ.பி.ஆர்.எல்.எவ்.செயலாளர்நாயகமும் டெல்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை

இந்திய வெளிவிவகார அமைச்சர் மாதவ்சிங் சோலங்கியை E.P.R.L.F. செயலாளர் நாயகம் சுரோஸ் பிரேமச்சந்திரன் அவர்களும் மத்தியகமிட்டி உறுப்பினர் கேதீஸ்வரன் அவர்களும் கடந்த 16. 07. 1991 அன்று டெல்கியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பேச்சுவார்த்தை ஒரு மணிநேரம் நீடித்தது.

இந்திய இலங்கை ஒப்பந்தம், அதிகாரப்பரவலாக்கல், தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய அகதிகள் தொடர்பாகவும் அதிகாரப் பரவலாக்களில் ஸ்ரீலங்கா அரசாங்கம் கடைப்பிடிக்கும் இழுபறி நிலை தொடர்பாகவும் விரிவாகப் பேசப்பட்டது. அத்துடன் புலிகளின் அனாவசிய யுத்தம் அவர்களது பயங்கரவாத நடவடிக்கைகள் தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியாக அவர்கள் செயற்பட்டுவரும் நிலை தொடர்பாகவும் அங்கு பேசப்பட்டது.

இலங்கையில் தமிழ் மக்கள் முழு உரிமையுடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கும் இங்கு இருக்கக்கூடிய அகதிகள் தமது சொந்த இடங்களுக்கு தாமாகவே திரும்பிச் செல்லக்கூடியவாறும், அங்கு அமைதியான ஜனநாயக பூர்வமான சூழ்நிலைதோன்ற இந்தியா தமது ஒத்துழைப்பை நல்கவேண்டும் என்றும், கோரப்பட்டது. பேச்சுவார்த்தையில் இந்தியத்தரப்பில் வெளிவிவகார அமைச்சர் சோலங்கி அவர்களும் ஸ்ரீலங்காவிற்கான இணைச் செயலாளர் அபயங்கர், அமைச்சின் தனிச் செயலாளர், இந்திரா காங்கிரஸ்செயலாளர்களில் ஒருவரான கட்கிலும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர்கள் ரங்கராஜன், குமாரமங்கலம், வாழைப்பாடி இராமமூர்த்தி ஆகியோர்களையும் அ.தி.மு.க. பாராளுமன்றகுழுத் தலைவர் சுவாமிநாதன் U C P I தலைவர்கள் பாண்டியன் மொகிற்சன், ஆகியோரையும் ஏனைய பல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து இலங்கையில் இருக்கக்கூடிய நிலைமைகள் தொடர்பாக விளக்கினார்கள். C. P. I. (M) பொதுச் செயலாளர் தோழர்- சுர்ஜித் சிங்குடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தமாத கடைசியில் ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சரும், இந்திய வெளிவிவகார அமைச்சரும் டெல்கியில் சந்திப்பதற்கு முன்பாக E.P.R.L.F. செயலாளர் நாயகம் டெல்கியில் முக்கியமான அமைச்சர்களை சந்தித்தது அரசியல் வட்டாரத்தில் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது.

## பன்னிரண்டுகட்சிகள் கூட்டுக்கோரிக்கை
## சகல அகதிகளுக்கும் நிவாரணம் வேண்டும்

வடக்கு கிழக்கு யுத்தம், வன்செயல்கள் காரணமாக பாதிக்கப்பட்டவர்களில் பத்துலட்சத்துக்கு அதிகமானோர் அகதிமுகாம்களுக்கு வெளியேயே வாழ்கிறார்கள். எனவே ஏனைய அகதிகளுக்கு வழங்கப்படும் உலர்உணவுப்பொருள் நிவாரணம் இவர்களுக்கும் தொடர்ந்து வழங்கப்படவேண்டுமென பன்னிரண்டு அரசியல் கட்சிகள் இணைந்து கோரிக்கைவிடுத்துள்ளன.

அகதிமுகாம்களுக்கு வெளியேவாழ்பவர்களுக்கு உலர்உணவு நிவாரணம் வழங்கப்படமாட்டாது என்று அரசுவிடுத்த அறிவித்தலைத் தொடர்ந்து,ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) சிராவஸ்தியில் ஒழுங்குசெய்திருந்த கூட்டத்தில் நவசமசமாஜக்கட்சி, லிபரல்கட்சி, ஸ்ரீலங்காமக்கள்கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈரோஸ், தமிழ்காங்கிரஸ் ஆகியன கலந்துகொண்டன.

இவர்கள்விடுத்த கூட்டுக்கோரிக்கையில், பட்டினியால் அவதியுறும் மக்களுக்கு எதிரான இந்தஉத்தரவு அறிவித்தலானது அடிப்படை உரிமைகளை மீறுவதனால் முழு உலகினாலும் கண்டிக்கத்தக்கதாகும். எனவே உடனடியாக இந்தஉத்தரவை வாபஸ் பெற்று இந்தமக்களுக்குத் தேவையான உலர்உணவுப்பண்டங்களை உடன் அனுப்பிவைக்குமாறு அரசைக்கேட்டுக்கொள்கிறோமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது இக்கோரிக்கை மனுவில் ரெலோ, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி, பௌஜனநிதகள்கட்சி, முஸ்லீம்காங்கிரஸ் ஆகியனவும் கைச்சாத்திட்டுள்ளன.

## புலிகள் போதைவஸ்து கடத்தல்காரர்களே.

ஆனையிறவு இராணுவமுகாம் முற்றுகையும் அதை விடுவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையும் 1500 புலிகளையும், 150 இராணுவத்தினரையும் பலியெடுத்துள்ளது. யாழ்/குடாநாட்டுக்குள் யுத்தத்தை தொடர்ந்து கொண்டுசெல்ல இராணுவம் தயாராக உள்ளது என்று பிரிகேடியர் விமலரத்ன கூறியுள்ளார். புலிகள் இராணுவ ரீதியில் மட்டுமல்ல அரசியல் ரீதியிலும் ஆத்மார்த்தரீதியிலும்கூட பலவீனமானநிலையிலேயே உள்ளனர். அவர்கள் இப்போது அனாதைகளாக்கப்பட்டுள்ளனர். புலிகள் தலைவர் கிட்டுவை லண்டனிலிருந்து வெளியேற்றநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒடுக்கப்பட்ட இலங்கைத்தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்றநிலையை புலிகள் உலகரீதியில் இழப்பார்கள் என்பதையே இதுகாட்டுகிறது. புலிகளுக்கு எதிராக இந்திய தமிழ்நாடு அரசாங்கங்கள்நடவடிக்கைஎடுப்பதால் தமிழகத்திலிருந்து இனிப்புலிகளுக்கு உதவிகிட்டப்போவதில்லை. பாக்கு நீரிணையில் கடற்படை ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளதானது தமிழகத்திலிருந்து அவர்கள்பெறக்கூடிய உதவி விரைவில் மங்கிவிடும் என்ற அர்த்தத்தையேதருகிறது.

ராஜீவ்காந்தியை கொலைசெய்ததன்மூலம் புலிகள் தமிழ்நாட்டிலுள்ள தமிழர்களுக்கும் இலங்கைத்தமிழர்களுக்குமிடையில் குரோதநிலையை உருவாக்கியுள்ளனர். இதற்கு மாற்றுவழியாக வன்செயல்பாதையை கைவிட்டு ஜனநாயகப்பாதையை தாம் கையேற்கப்போவதாக புலிகள் அறிவிக்கவேண்டும். இன்றைய சூழ்நிலைகளின்கீழ் இலங்கை அரசாங்கம் முன்வைத்த நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதைத்தவிர வேறுவழியில்லைப்போல் தெரிகிறது.

சர்வதேச ஆதரவின்றி எந்தவொருவிடுதலை யுத்தத்தையும் நடத்தமுடியாது. வன்செயல்பிரயோகத்தில் மட்டுமே நம்பிக்கைகொண்டதன் மூலம் புலிகள் தமிழர்களின் சுதந்திரப்போராளிகள் என்ற நிலையிலிருந்து ஆயுத போதைவஸ்துக் கடத்தல்காரர்கள் என்றநிலைக்கு தாழ்ந்துள்ளனர். இந்தத்தற்கொலைப்பாதையில் தொடர்ந்தும் புலிகள் செல்லக்கூடாது. இதுவரை பேச்சுவார்த்தைஎன்றவார்த்தை புலிகளின் அகராதியில்வந்ததில்லை. பலலட்சக்கணக்கான தமிழர்களின் உரிமைகளை பெறுவதற்காக புலிகள் ஏனையதமிழ்குழுக்களுடன் இணைந்து செயலாற்ற வேண்டும். (தினமணி 6.8.91. ஆசிரியர் தலையங்கத்திலிருந்து...... )

படிப்பகம்

# அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே!

தமிழ்பேசும் மக்களை துன்பங்களின் எல்லைக்கு இட்டுச்செல்வதில்யார் வல்லவர் என்று ஶ்ரீலங்கா இனவெறி அரசும், புலிகளும் போட்டிபோட்டுக்கொண்டு ஒடுக்குமுறையையும், அடக்குமுறையையும் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். இதுவரை கண்டிராத அளவுக்கு தமிழ்பேசும் மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அநுபவித்துவருகின்றனர்.

வடக்கு கிழக்கில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. மக்கள் உடுப்புதோய்ப்பதற்கு பனங்கழியையும் அடுப்புச்சாம்பலையும் உபயோகிப்பதோடு உடலுக்கு பயத்தம்மாவை அரைத்து பூசிக்குளிக்கின்ற அளவுக்கு பதினெட்டாம் நூற்றாண்டுக்கு பின்நோக்கித் தள்ளப்பட்டுள்ளனர்.

மக்கள் வீடுகளைவிட்டு இடம்பெயர்ந்து பாடசாலைகள், தேவாலயங்கள், மரநிழல்களில் கூடாரங்கள் என்றுநாளுக்குநாள் அகதிகளாகிக் கொண்டிருக்கின்றனர். வீட்டிலிருப்பவர்களும் அகதி வாழ்க்கையயே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். பட்டினியாலும், வைத்தியவசதிக்குறைவுகளாலும் தொற்றுநோய்கள் அதிகரிக்க அவலச்சாவுகள் அடுக்கப்படுகின்றன.

காலத்துக்குக்காலம் தமது எஜமானர்களின் உத்தரவுகளை செய்துமுடிக்கவும், தமது எதிரிகளை தீர்த்துக்கட்டவும் துப்பாக்கிக்கலாச்சாரத்தை புலிகள் கைக்கொண்டுவருகின்றனர். நிகழ்த்

> எண்ணாயிரம் இராணுவம்வரையில் ஆனையிறவைச்சுற்றி குவித்து வைத்துக்கொண்டிருக்கும் இனவெறி அரசின் வடபகுதி பிரிகேடியர் விஜய விமலரட்ண குடாநாட்டுக்குள் சண்டையைத்தொடர தயாராயுள்ளோம் என கூறியிருப்பது, குடாநாட்டு மக்களுக்கு ஊதப்பட்டுள்ள அபாயச்சங்கொலியாகும். விரைவில் குடாநாட்டுக்குள் பாரியஇராணுவத்தாக்குதல்களை எதிர்பார்க்கலாம்.

தப்படும் படுகொலைகளை மறக்க, மறைக்கச் செய்வதற்கு தாக்குதல்களை மேற்கொள்ளுவதும், என்ன இருந்தாலும்

எண்ணாயிரம் இராணுவம்வரையில் ஆனையிறவைச்சுற்றி குவித்து வைத்துக்கொண்டிருக்கும் இனவெறி அரசின் வடபகுதி பிரிகேடியர் விஜயவிமலரட்ண குடாநாட்டுக்குள் சண்டையைத்தொடர தயாராய் உள்ளோம் என கூறியிருப்பது,குடாநாட்டு மக்களுக்கு ஊதப்பட்டுள்ள அபாயச்சங்கொலியாகும். விரைவில் குடாநாட்டுக்குள் பாரிய இராணுவத்தாக்குதல்களை எதிர்பார்க்கலாம்

ஆனையிறவில் விழுந்த அகோரஅடியில் அலறிப்புடைக்க ஓடியபுலிகள் அந்த தோல்வியை மறைத்துக்கொள்ள, நாடகத்தில் புளித்துப்போன காட்சியை மீண்டும் திறந்துள்ளனர்.

இலங்கை அரசுடன் புலிகள் பேசவேண்டும். அதற்குவேண்டி புலிகளை நான் சந்திக்கத்தயார் என்ற தொண்டமானின் வேண்டுகோளை தாம் ஏற்றுக் கொள்வதாக பாலசிங்கம் பத்திரிகையாளர் முன்புதெரிவித்துள்ளார்.

முன்பு பதின்நான்கு மாதங்களாக என்ன பேசினார்கள் என்பது இன்றுவரை மூடுமந்திரமாக இருக்கும்போது இனிமேலும் மேற்கொண்டு எதைப்பற்றி என்ன பேசப்போகிறார்கள்.

யாழ்குடாநாட்டுக்கு சாதாரண பத்திரிகையாளர்களே சென்றுவர முடியாது.

திபத்தியத்தின் உறவுகளை அம்பலப்படுத்தி நிற்கிறது.

> கிழக்கையும், வடக்கில் வவுனியா வரைக்கும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தையும், இராணுவமயப்படுத்தலையும் வெற்றிகரமாக மேற்கொண்டுவிட்டு குடாநாட்டுக்குள் தாக்குதலைமேற்கொள்ள தயார் நிலையில் தருணம் பார்த்திருந்த இனவெறிஅரசுக்கு புலிகளின்ஆனையிறவுத்தாக்குதல் நல்லவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே ! புலிகள் பகிரங்கமாக பாசிசப்போக்கை கடைப்பிடித்தாலும், தமது சர்வதேச உறவுகளை அம்பலப்படுத்தினாலும், புலிகள் தேசிய தலைமைகள் என்று சித்தரிப்பதும் அவர்களில்லாது அரசியல் தீர்வு ஏற்பட

## அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே!

தட்டிக்கேட்பதற்கு யாருமில்லை என்ற எக்காளத்தில் இனவெறிஅரசு உலர் உணவு நிவாரணத்தை நிறுத்தப்போவதாக மிரட்டுகிறது. சமூகநிறுவனங்கள் தொண்டர் ஸ்தாபனங்கள், மக்கள்பால் அக்கறையுள்ள அரசியல்கட்சிகளின் தொடர்ச்சியான கோரிக்கைகளின் பேரில் சொற்பஉணவுப்பண்டங்களை அதுவும் காலக்கிரமமின்றி அரசு தான் விரும்பியபோது இதுவரை அனுப்பிவந்துள்ளது. கிடைக்கும் அற்பசொற்ப உண

> புலிகள் பகிரங்கமாக பாசிசப் போக்கை கடைப்பிடித்தாலும்,தமது சர்வதேச உறவுகளை அம்பலப்படுத்தினாலும், புலிகள் தேசியதலைமைகள் என்று சித்தரிப்பதும் அவர்களில்லாது அரசியல் தீர்வு ஏற்படமாட்டாது. ஏற்படக்கூடாது என்றுதம்பட்டமடிப்பதும் பெரியமனிதர், புத்திஜீவிகள் என்றபோர்வையில் ஒருசிலர் தமது நலன்களைப் பாதுகாப்பகவும், அதற்குவேண்டி புலிகளைப் பாதுகாக்கவும்ஆடிவரும் கபடநாடகமாகும்.

வுப்பண்டங்களை புலிகள் பதுக்கிக் கொள்ள, மக்கள் அரைவயிறு கால்வயிறு கழுவிக்கொண்டு காலத்தைஓட்டுகின்றனர். இந்நிலையில் உலர்உணவுப் பொருட்களின் நிறுத்தமானது மக்களை குண்டுபோட்ட அழிக்காமல் பஞ்சத்தால் பட்டினியால் சாகடிக்கவைக்கும் நயவஞ்சகத்திட்டமாகும்.

வடக்கு கிழக்கில்வாழும் மக்களுக்கு போராட்டத்திலேயே வெறுப்பு ஏற்படக்காரணம்யார்?
பட்டினியால்வாடிவதங்கி தமிழும் வேண்டாம் ஈழமும்வேண்டாம் மூன்று வேளைக்கஞ்சி கிடைத்தால்போதும் என்றவிரக்திநிலை மக்களுக்கு வரக் காரணம்யார்?
வாய்திறந்தால் மண்டையில்வெடிஎன்ற பாசிசப்போக்கினைக் கடைப்பிடித்து மக்களை நடைப்பிணங்களாக்கி வைத்திருப்பவர்கள்யார்?
தேவை ஏற்பட்டால் பாலகர்களையும் வயோதிபர்களையும் தமிழீழமெனபலி கொடுப்பது ஒருபுறமும், தோல்வி ஏற்பட்டால் அரசுடன் பேச்சுவார்த்தைஎன கூடிக்குலாவுவது மறுபுறமுமாக மக்களைக்கேடயங்களாக்கி தம்மைப்பாதுகாத்துக்கொள்பவர்கள் யார்?
புலிகள்..... புலிகள்....... புலிகள்....

புலிகள் சண்டைபிடிக்கிறார்கள் என்று சனங்களை நினைக்கச்செய்து படுகொலைகளை மூடிமறைப்பதும் புலிகளின் மரபுவழிமுறையாகிவிட்ட ஒன்று.

அந்தவரிசையில் ராஜீவின்படுகொலையால் சர்வதேசரீதியில் நெருக்கடிகளையும், எதிர்ப்புக்களையும் சந்தித்துக்கொண்ட புலிகள் அதனை மறைக்க வேண்டி ஆனையிறவு தாக்குதலை மேற்கொண்டனர். ஆயிரத்துஐநூறு சிறுவர்களை பலிகொடுத்து படுதோல்வியை சந்தித்துக்கொண்ட புலிகள் சரணாகதிப்பாணியில் பின்வாங்கியுள்ளனர்.

கிழக்கையும், வடக்கில் வவுனியாவரைக்கும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தையும், இராணுவ மயப்படுத்தலையும் வெற்றிகரமாக மேற்கொண்டுவிட்டு குடாநாட்டுக்குள் தாக்குதலை மேற்கொள்ள தயார்நிலையில் தருணம் பார்த்திருந்த இனவெறி அரசுக்கு புலிகளின் ஆனையிறவுத்தாக்குதல் நல்லவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

வவுனியாவில் வரும்மக்களிடம் செய்தி சேகரிக்கும் நிலையில், அமெரிக்காவிலிருந்து வெளிவரும் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் நிருபரும் சிலாபத்தில் மீண்டும் நிறுவப்பட்டுள்ள வொய்ஸ் ஒவ் அமெரிக்கா என்ற வானொலிநிலையத்தின் செய்தி நிருபரும் புலிகளின் அழைப்பைஏற்று, பாலசிங்கம் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டுக்கு யாழ்ப்பாணம் போயுள்ளார்கள்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபோது வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வானொலிநிலையம் ராஜீவின் வேண்டுகோளுக்கிணங்க மூடப்பட்டதும். ராஜீவை புலிகள் கொலைசெய்தபின்பு மீண்டும் இலங்கை அரசின் அனுமதியுடன் இந்தவானொலிநிலையம் திறக்கப்பட்டதும், இன்று புலிகளின் அழைப்பின் பேரில் வொய்ஸ் ஒவ் அமெரிக்காவின் நிருபர் யாழ்ப்பாணம் சென்றிருப்பதும் ஒன்றோடொன்று தொடர்புடைய சங்கிலித்தொடர்கள் ஆகும். இது புலிகள், ஶ்ரீலங்காஅரசு, அமெரிக்கஏகா

மாட்டாது, ஏற்படக்கூடாது என்று தம்பட்டமடிப்பதும் பெரியமனிதர், புத்திஜீவிகள் என்றபோர்வையில் ஒருசிலர் தமது நலன்களைப் பாதுகாக்கவும், அதற்குவேண்டி புலிகளைப் பாதுகாக்கவும் ஆடிவரும் கபடநாடகமாகும்.

இவர்களின் அற்பநலன்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் சுயநலநோக்கிற்காக போராட்டம் குழிதோண்டி புதைக்கப்பட வேண்டுமா ?

தமிழ்பேசும் மக்கள் ஒட்டுமொத்தமாக சர்வதேச பயங்கரவாத கூட்டாளிகளால் அழிக்கப்படவேண்டுமா?

என்பதே இன்று எம் ஒவ்வொருவருக்கும் முன்னால் உள்ள விடைகாணப்பட வேண்டிய பிரச்சனையான கேள்வியாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## முகத்தாரின் முணுமுணுப்பு



ஆர் ஆர் எதைப்பற்றிப்பேசிறது எண்டு இல்லாமல் போச்சு. மனிதாபிமானம் எண்டால் கிலோ என்னவிலை எண்டு கேக்கிற கிட்டு மனிதாபிமானமுறையில தன்னை லண்டனில இருக்க விடச்சொல்லி விண்ணப்பிச்சிருக்கிறாராம். இந்த நூற்றாண்டில நகச்சுவை நோபல் பரிசு கிட்டுவுக்கு தான்.

இப்பநினைச்சாலும் இரத்தம் கொதிக்குது. எத்தனை ரெலோ,புளொட்,ஈ.பி.ஆர்.எல்.எவ். பொடியன்களை மனிதாபிமானமே இல்லாமல் துடிக்கத்துடிக்க நரபலியெடுத்த பெருமைக்குரியவர் இந்தக் கிட்டு. எத்தனை பொடியளை காவோலை, ரயர்போட்டு உயிரோட கத்தக்கத்த, கதறக்கதற கொழுத்து விச்ச சீமான் கிட்டு. கிட்டுவின்ர சித்திரவதைக்குப் பயந்து எத்தனை பொடியள் விடுதலையே வேண்டாமெண்டு வெளிநாட்டுக்கு ஓடினவங்கள். இப்படி ஒண்டா இரண்டா? இலங்கை ஆமியைவிட எங்கடபொடியளுக்கு கிட்டு செய்தகொடுமைகள் ஏராளம். இப்படி மனிதாபிமானமே இல்லாத மாநுடப்பிறவி இப்ப லண்டனில வந்து மனிதாபிமானம் பற்றி வாய்கிழியப் பேசுகிறார்.

எனக்குவாற விசருக்கு முந்திஎண்டால் அரைப்போத்தல் அடிச்சிட்டு ஒருகை பாத்திடுவன். இப்ப ஏ.கே.யை நினைச்சாலெல்லே பயமாய்கிடக்குது.

கிட்டு மறந்தாரோ என்னவோ, அவற்றை ஆக்கள் மறந்தினமோ என்னமோ ஆனால் சனங்கள் மறக்கேல்லை. ஆனந்தராஜா மாஸ்ரரை கிட்டு கொலைசெய்விச்சதை எப்பவும்மறக்காதுகள். ஆனந்தராஜா மாஸ்ரர் செய்தகுற்றம் சென் ஜோன்ஸ் பள்ளிக்கூட பொடியளை, ஆமியோடசேர்ந்து பந்துவிளையாட விட்டார் என்பதாகும். இவர் துரோகி எண்டுசொல்லி கிட்டு சுடுவிச்சார்.

ஆமியோட பந்துவிளையாடப்போன ஆனந்தராஜா மாஸ்ரர் துரோகி. ஆனால் காலப்போக்கில ஆமியைப் பரிமாறினதை முன்நின்று நடாத்திய கிட்டு ஆமிக்காரருக்கு பிறந்தநாள் பரிசாக தங்கச்சங்கிலி பரிசளிச்சார். (சனங்களிட்டை ஆமியோடசண்டைபிடிக்க ஆயுதம்வாங்க பவுண்சேர்த்தது. அதில ஆமிக்கு சங்கிலி பரிசளிச்சதெண்டு நான்சொல்லவரயில்லை அப்பிடி நீங்கள்நினைச்சா அதுக்குநான் பாடில்ல)

கிட்டு வெளிநாட்டுக்கு போறதுக்கு பாஸ்போட்டுக்கு ஸ்பொன்சர் பண்ணினதே,யாழ்ப்பாணத்தில பயங்கர அழிவுகளையும் படுகொலைகளையும் செய்யப்பொறுப்பாயிருந்த ஆமிப்பிரிகேடியர்தானாம். இதையும் போராட்டமெண்டு சொல்லிக்கொண்டு நாங்கள் எந்தச்சுவரிலபோய்முட்ட? அதுசரி துடிக்கத்துடிக்க கொலைசெய்த கிட்டுவும் குழறக்குழற படுகொலைசெய்த பிரிகேடியரும் ஒருவிதத்தில சொந்தக்காரர்தான்.

லண்டனில ஒண்டும் சரிவராதெண்டு லோயர் சொன்னதைக்கேட்ட கிட்டு, ஒருத்தருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் கறுப்புவழியில நைசாக பரீஸ் வந்தாராம். அங்கை ஏற்கனவே அறிக்கைத்திலகம் திலகர் இருந்து வருகிறார். பரீஸ் வந்த கிட்டு நான்தான் இனி அறிக்கைகள் விடுவேன் எண்டு ஒற்றைக்காலில நிண்டதால அவுஸ்திரேலியாவுக்கு வலுக்கட்டாயமா அனுப்பப்பட்டுவிட்டாராம்.

நாமஎன்னத்தைச் செய்யிறது. நமக்குள்ள முணுமுணுத்துப்போட்டு இருக்க வேண்டியதுதான். சனங்களை எல்லாரும் மடையர்எண்டு நினைக்கக்கூடாது. என்னைப்போலதான் வீட்டுக்கு வீடு சனம் முணுமுணுக்கும். ஒருநாளைக்குத்தெரியும்

# இருள்மூடிய போராட்டத்திற்கு ஒளியூட்டுவோம்

இலங்கையின் வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான யுத்தம் ஒன்று ஒரு வருடத்துக்குமேலாக மீண்டும் நடைபெற்று வருகிறது. இந்த அழிவு தரும் யுத்தத்தால் இதுவரை குண்டு போட்டு தகர்க்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் சுமார் ஏழாயிரத்தை தாண்டி விட்டது. இறந்தவர் சுமார் இருபத்தையாயிரத்திலிருந்து நாற்பதாயிரம் வரை இருக்கலாம். காணாமல் போனோர் ஆறாயிரத்துக்கும் அதிகமாகி விட்டது. இடம் பெயர்ந்து அகதிகளானவர்கள் தொகை 12 லட்சத்துக்கு மேல் சென்று விட்டது. இதில் இரண்டு லட்சத்து இருபதினாயிரம் பேர் இந்தியாவில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர் வெளிநாடுகளில் தஞ்சமடையும் இலங்கைத் தமிழ் அகதிகளின் தொகை பல மடங்காக அதிகரித்துள்ளது.

> வவுனியாக்காட்டிலிருந்த புலிகளை ஆயுதங்களுடன் கொழும்புக்கு ஹெலியில் அழைத்து வந்து ஐந்து நட்சத்திரக் ஹோட்டலில் தங்க வைத்து ஒரு வருடத்திற்கு மேலாக நீண்ட பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தினர் அதேநேரம் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர், யோகேஸ்வரன்ஆகியோர் கொழும்பில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது ஜனநாயக வழிக்குவந்த கட்சிகள், இயக்கங்களை அழிப்பதில் புலிகள் - அரச பேச்சுவார்த்தை முன்னேறியிருப்பதையே எடுத்துக்காட்டியது.

மின்சாரம் எரிபொருள் என்பன வட பகுதிக்கு நிறுத்தப்பட்டு பலமாதங்கள் ஆகிவிட்டது. உணவுப் பற்றாக்குறையால் மக்கள் அரைப்பட்டினியுடன்அவதியுறுகிறார்கள். போக்குவரத்து வசதி வைத்திய வசதி முற்றும் ஸ்தம்பித்த நிலை, தொழில் விவசாயம் எதுவும் செய்ய முடியாத மக்கள் பெரும் கஷ்ட நிலைக்கு உள்ளாகியுள்ளார்கள். கல்வி வேலைவாய்ப்பு சீர் குலைந்து விட்டது. ஷெல்லடிகள், விமான குண்டுத்தாக்குதல்கள், ஷெல்லடிகள் மத்தியில் இடம் பெயரமுடியாது தடுக்கப்பட்ட மக்கள் புலிகளின் அராஜகத்தின் பிடியில் அல்லல் படுகிறார்கள். இன்று தமிழ் பேசும் மக்கள் படும் அவலம் இதற்கு முன் என்றுமே இல்லாத ஒன்றாகும்.

1983 ம் ஆண்டு யூலை இனக்கலவரம் முதல் 1987 ம் ஆண்டு மே மாதம் வரையான காலம் இலங்கைத்தமிழர் வரலாற்றில் சோகமான ஒரு கால கட்டமாகும். ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். இலட்சக்கணக்கில் மக்கள் வீடுகளை விட்டு அகதிகளாயினர். பல ஆயிரம் கோடிரூபா சொத்துக்கள் அழிக்கப்பட்டன. ஒர லட்சத்து ஐம்பதினாயிரம் பேர்வரை இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக இந்தியாவிற்குச் சென்றார்கள். வடமராட்சியில் ஒப்பரேஸன் லிபரேஸன் நடந்துகொண்டிருந்தது. பெருமளவில் மக்கள் அழிந்தும் இடம்பெயர்ந்து கொண்டிருந்தார்கள். வடமராட்சி சுடுகாடாக மாறியது. இந்த நெருக்கடிக்கு தீர்வுகாண இலங்கை இந்திய உடன்பாடு காணப்பட்டது. தமிழ் இனத்திற்கு ஏற்பட்ட சோக அத்தியாயத்திற்கு முடிவு காணவும், இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை அதிபர் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டனர். இந்த ஒப்பந்தம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு சரியான தீர்வுகாணும் வகையில் வடிவமைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

தனிச்சிறப்பு மிக்க இனப்பிரிவாம் தமிழினம் ஏற்றுக் கொள்ளப் படல் வேண்டும் என்ற தமிழர்களின் அடிப்படை ஆவலை நிறைவேற்றுவது, அவர்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் வகையில் அரசியல் சுயாட்சி இந்தக் குறிக்கோளை நிறைவேற்ற தேவையான அரசு அதிகாரம், இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளை தமிழர்களின் வரலாற்றுப் பெருமை வாய்ந்த பகுதியாக அறிவித்தல் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு தமிழையும் ஒரு அரசாங்கமொழியாக ஏற்றுக் கொள்வதை உள்ளடக்கிய ஒப்பந்தம் இதுவாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் ஒன்றுடனும் முதல்வர் ஒருவருடனும், கூடிய நிர்வாகப் பிரிவாக இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளை ஆக்குதல் இந்த ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ள அம்சமாகும். மாகாண கவுன்சிலுக்கு அரசு அதிகாரங்கள் பகிர்வு செய்த சுய ஆட்சிக்குத் தேவையான முழு நடவடிக்கைகளையும் உறுதிப் படுத்துவது இந்த ஒப்பந்தத்தின் இன்னொரு அம்சமாகும் என இலங்கை இந்திய ஒப்பந்தம் தெரிவிக்கிறது.

இந்த இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் அபிப்பிராய பேதங்கள் இருந்தபோதும், அநேகமாக எல்லா இயக்கங்களும் இதை ஏற்றுக்கொண்டன.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுவதாக இருந்தால் அதில் அனைத்து இயக்கங்களுக்கும் சம பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வற்புறுத்திக் கேட்டிருந்தது. இருந்தபோதும் மற்ற இயக்கங்களுடன் சேர்ந்து இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த விடுதலைப்புலிகள் விரும்பாததால் விடுதலைப் புலிகளுக்கே இடைக்கால நிர்வாகம் முழுமையாக ஒப்படைக்கப் பட்டது. விடுதலைப்புலிகள் தலைவராக யாரைத் தெரிவுசெய்வது என்ற பிரச்சினையை சாக்காக வைத்து இடைக்கால நிர்வாகத்தை கையேற்க மறுத்து விட்டனர்.

## தோழர். வி.ஏ.கந்தசாமி

இலங்கை இந்திய ஒப்பந்தம் சம்பந்தமாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தலைவர்களுக்கும் இந்திய அரசுத்தலைவர்களுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகளின் போது, இந்தியாவிலுள்ள ஒரு மாநிலத்திற்கு குறையாத அதிகாரங்கள் வடக்கு -கிழக்கு இணைந்த பிரதேச அரசுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையிலும் நீண்டகால யுத்தப் பேரழிவுகளால் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு நிம்மதியில்லாது அவலத்தில் உளன்ற தமிழ் பேசும் மக்களுக்கு அமைதி, ஜனநாயகம், சமாதானம் ஆகியவற்றைக் கொண்டு வருவதற்கும், அந்த நேரத்தில் இதைவிட மாற்றுவழி ஏதும் இல்லாத நிலையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தேர்தலில் பங்கெடுத்து வெற்றிபெற்றதன் மூலம் இன்னொரு நேச இயக்கத்துடன் சேர்ந்து மாகாண அரசை உருவாக்கியது. இதற்கான தலைமைப் பீடமாக திருகோணமலை தேர்ந்தெடுக்கப்பட்டது. இதன் முதலமைச்சராக அ.வரதராஜப் பெருமாள் தெரிவு செய்யப்பட்டார்.

மாகாண அரசுக்கான இலச்சினை, கொடி என்பவற்றைத் தேர்ந்தெடுத்து மாகாண அரசு தனது சுய ஆதிக்கத்தை நிலைநாட்ட பெரும் முயற்சி செய்தது.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தமிழினத்தின் விடுதலைப்போராட்டத்தை ஒடுக்குவதில் ஈடுபட்ட, பேரினவாதத்திற்கு சேவை செய்த சிங்களப் படையிடம் தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் உருவாகிய மாகாண அரசை பாதுகாக்கும் பொறுப்பை எவ்வாறு ஒப்படைக்கமுடியும்? ஆகவே எமது பாதுகாப்பு, நிதி நிர்வாகம், நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்டிருந்த தொழில்,விவசாயம், காணிக்குடியேற்றம், கல்வி, போக்குவரத்து, கடற்தொழில் ஆகியவற்றைப் புனரமைக்கும் நிர்மாணிக்கும் அதிகாரங்களை மத்திய அரசிடம் பெறுவதற்காக மாகாண அரசு தொடர்ந்துபோராடவேண்டி ஏற்பட்டது.

இந்த நிலையில் இந்திய விரோத நிலைப்பாட்டை எடுத்த விடுதலைப் புலிகள் தமிழினம் தன்னைத் தானே ஆளும் உரிமையைநிலைநாட்ட போராடிவரும் மாகாண அரசை செயல்பட முடியாமல் தடுக்க சிவில் நிர்வாகத் தடையை கொண்டுவந்தார்கள். இந்தத் தடையையும் மீறி காங்கேசன் துறைவரை புலிகளால் அழிக்கப்பட்ட புகையிரதப் பாதைகள் மீண்டும் செப்பனிடப்பட்டு யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்து ஆரம்பிக்கப் பட்டது. கச்சேரி, வங்கிகள் மீண்டும், இயங்க வைக்க துரித நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் வழங்குவதை புலிகள் தடுத்து ஏப்பமிட்டதால் அவை உரியவர்களுக்கு சென்றடைவதில் தடங்கல் ஏற்பட்டது. புனர் நிர்மான வேலைகளும் சீர்குலைந்தன. பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கும், திருகோணமலையிலிருந்து பொத்துவில் வரைக்குமான பிரதான போக்கு வரத்துப் பாதை அமைப்பதற்கான எமதுதிட்டம் நிறைவேற்றப்பட முடியவில்லை. அழிவுகளில் இருந்து ஈழத்தைக் கட்டி எழுப்புவதற்கான எமது நோக்கங்கள் எதுவும் நடைமுறைப் படுத்துவதற்கு எதிராக புலிகளின் நாசவேலைகள், ஆயுதத்தாக்குதல்கள் என்பன எமது மக்களுக்கும்,அபிவிருத்தி வேலைகளுக்கும் எதிராக திருப்பப்பட்டன. அதிகார பரவலாக்கலைக்கூட நடைமுறைப் படுத்த இலங்கை பேரினவாத அரசுதடங்கல்களை ஏற்படுத்தியதுடன் வவுனியா காட்டில் இருந்த புலிகளை ஆயுதங்களுடன் கொழும்புக்கு ஹெலியில் அழைத்து வந்து ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கவைத்து ஒரு வருடத்திற்கு மேலாக நீண்ட பேச்சுவார்த்தை. ஒன்றை நடத்தினர். அதேநேரம் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது

> பாதிக்கப்பட்டமக்களுக்கான நிவாரண உதவிகள் வழங்குவதை புலிகள் தடுத்து ஏப்பமிட்டதால் அவை உரியவர்களுக்கு சென்றடைவதில் தடங்கல் ஏற்பட்டது. புனர்நிர்மான வேலைகளும் சீர்குலைந்தன. பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்கும், திருகோணமலையிலிருந்து பொத்துவில் வரைக்குமான நெடுஞ்சாலைப் போக்குவரத்துப்பாதை அமைப்பதற்கான எமது திட்டம் நிறைவேற்றப்பட முடியவில்லை.

ஜனநாயக வழிக்கு வந்த கட்சிகள் இயக்கங்களை அழிப்பதில் புலிகள் அரசு பேச்சு வார்த்தை முன்னேறி இருப்பதையே எடுத்துக்காட்டியது.

தமிழ் மாநில பாதுகாப்பு சம்பந்தமாக செப்டம்பர் 15 கூட்டறிக்கை பிரகாரம் அமைக்கப்பட்ட மாகாண முதலமைச்சர் இலங்கைப்பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர்உட்பட நால்வர் கமிட்டி தமதுகடமையைச் செய்யத்தவறியதால் தமிழர் தேசிய இராணுவம் ஒன்றை அமைக்கும் அவசியம் எமக்குஏற்பட்டது. அதேநேரம் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக 19 அம்சக் கோரிக்கை ஒன்றை முன்வைத்து இலங்கை இந்திய அரசுடனான எமது பேச்சு வார்த்தைகளை நாம் முன்னெடுத்தோம்.

ஒருவருடத்துக்கு மேலாக புலிகளுடன் அரசு நடத்திய பேச்சு வார்த்தையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் புலிகளால் அமுல்நடத்தப்பட்ட சிவில் நிர்வாகத்தடையை அகற்றுவது பற்றி அரசு பிரஸ்தாபிக்கத் தவறியது. அதே நேரம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் புலிகளைப் பாவித்து மாகாண அரசையும் எமது பாதுகாப்பு அமைப்பையும் தாக்கி அழித்தொழிக்கும் கபட நாடகத்தை அரங்கற்ற தடையாக இருந்த இந்தியஅமைதிப்படையை வெறியேற்ற இரு பகுதியும் இணக்கத்திற்கு வருவதை இது சாத்தியமாக்கியது.

இலங்கையில் ஏற்பட்ட ஜனாதிபதி மாற்றமும், இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றமும் புலிகள் அரசு பேச்சு வார்த்தை முடிவை ஈடேற்றவாய்ப்பாக அமைந்தது. இதனால் இலங்கை இந்திய உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக வரவழைக்கப்பட்ட இந்திய அமைதிப்படை தமதுகடமையை நிறைவு செய்யாமலே வெளியேற நேர்ந்தது. தமிழினத்தின் பிரச்சினை தீர்க்கப் படாமலே தமிழினத்தின் பாதுகாப்பிற்கு எந்த வித உத்தரவாதமும் இல்லாமலேயே இந்தியப்படை வெளியேறியது. இந்தச் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்து காத்திருந்த சிறீலங்கா பேரினவாத அரசு ஆயுத ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் பலப்படுத்தப்பட்ட புலிகள் அரசு வாகனங்களில் வடக்கு கிழக்கு இராணுவமுகாம்களுக்கு கொண்டு சேர்க்கப்பட்டார்கள். மாகாண அரசுக்கெதிராகவும் அதன் அமைப்புக் கெதிராகவும் புலிகளும், அரசு படையினரும் கூட்டுத் தாக்குதலில் ஈடுபட்டனர். ஆரம்பத்தில் தாக்குப்பிடித்த அரச படைகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்திய எமதுபடையினர் படிப்படியாக பின்வாங்க நேர்ந்தது. இந்தச்சந்தர்ப்பம் வடக்கு கிழக்கில் எல்லாபகுதிகளுக்கும் புலிகள் தம்மை விரிவு படுத்த உதவியது.

தேர்தல் ஒன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண அரசையும், அதன் நிர்வாகத்தையும் கட்டியெழுப்பிய, எமது இயக்கத்தையும் வெளியேற்றி, ஆயுதந்தாங்கிய புலிகளை வடக்கு கிழக்கில் விஸ்தரிப்பதில் இலங்கை அரசு புலிகளுக்கு உதவியது. இதனால் செயல் இழந்த மாகாண அரசு புலிகளின் வேண்டுகோளின் பேரில் சிறீலங்கா அரசால் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட சட்டத்திருத்தம் ஒன்றின் மூலம் கலைக்கப்பட்டது. இலங்கை இந்திய உடன்படிக்கையின் சமாதான தீர்வால் உருவாகிய தமிழினம் தன்னைத்தானே ஆளும் அரசு உரிமை, பேரினவாத அரசின் நோக்கத்தை ஈடேற்றும் வகையில் புலிகளின் செயற்பாட்டால் சிதைக்கப்பட்டு விட்டது. தமிழினத்தின் மேல் யுத்தம் ஒன்றை புலிகளும்,அரசும் மீண்டும் கட்டவிழ்த்து விட்டார்கள்.

தமிழ் மாநிலத்தின் தலைநகரான திருகோணமலையில் தமிழர்கள் பெருமளவு விரட்டப்பட்டு இன்று சிங்களக் குடியேற்றத்தால் நிரப்பப்படுகிறது. திருகோணமலை அபிவிருத்தித் திட்டம், துறைமுக அபிவிருத்தி, சுதந்திர வர்த்தக வலையம் நிறுவுவது ஆகியவற்றின் மூலம் திட்டமிட்ட சிங்கள பிரதேசமாக மாற்றும் வேலை அரச உதவியுடன் தீவிரப்படுத்தப்படுகிறது.

ஆசியாவிலேயே சிறந்த இயற்கைத் துறைமுகம் திருகோணமலைத் துறைமுகம், என்ற பிரச்சாரத்தின் ஊடாக அந்நிய கடற்படைத்தளமாக திருகோணமலை மாற்றப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்படுகிறது. "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" என்ற அதி சக்தி மிக்க நவீன வானொலி நிலையம் சிலாபத்தில் நிறுவும் செயல்பாடு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவை இலங்கை இந்திய உடன்பாட்டுக்கு மாறான திருப்பங்களாகும். 1921 ம் ஆண்டு 1496ஆக இருந்த சிங்களவர்களின் தொகை 1981 ல் 86341 ஆக அதிகரித்துள்ளது. இன்று தமிழர் இல்லாத பிரதேசமாக திருகோணமலை மாவட்டத்தை மாற்றுவதற்கான சகல பிரயத்தனங்களும் அரசால் எடுக்கப்பட்டு வருகிறது.

கிழக்கு மாகாண தமிழர்கள் ஊர்காவல் படைகளாலும், அரசபடைகளாலும் விரட்டப்பட்டு அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளார்கள். அவர்களின் வீடு வாசல்கள் தகர்க்கப்பட்டு மீளக் குடியமர்த்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் கூட தமிழர்கள் மட்டக்களப்பு இருதயபுரத்தில் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். கொக்கட்டிச்சோலையை அண்டியபகுதிகளில் சிறீலங்கா இராணுவம் இன ஒழிப்புச் சங்காரத்தில் ஈடுபட்டது. யாழ்ப்பாணம், மன்னார், ஆகிய இடங்களில் இருந்து முஸ்லீம்கள் புலிகளால் விரட்டப்பட்டு சொத்துக்கள் சூறையாடப்பட்டது

www.padippakam.com

அரச படைகளின் குண்டு வீச்சு, ஷெல் அடிகளாலும், புலிகளின் மிரட்டலாலும் தமிழர்களின் பெரும் பகுதி யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளிலிருந்து வெளியேறிவிட்டனர்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் தமிழினத்தின் பிரச்சினைக்கு சமாதான தீர்வு ஒன்றை தருவதற்கு பதிலாக தமிழினத்தை அழித்தொழிக்கும் யுத்தம் ஒன்றையே விட்டுச்சென்றுள்ளது. இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட 1987 யூலை 29 ம் திகதி இருந்த நிலையிலும் பார்க்க இன்று பாரதூரமான நிலைக்கு தமிழினம் தள்ளப்பட்டுள்ளது. இரண்டு லட்சத்திற்கு அதிகமான அகதிகள் மீண்டும் இந்தியாவில் தஞ்சமடைந்திருப்பதும், எமது இயக்கத்தின் செயலாளர் நாயகம் க. பத்மநாபா வடக்கு-கிழக்கு மாகாண அரசின் நிதி அமைச்சர் கிருபாகரன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோகசங்கரி உட்பட 13 ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முக்கியஸ்தர்கள் கோடம்பாக்கத்தில் கோரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டதும், கொழும்பில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாம் தம்பிமுத்து, அவர் மனைவி இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டதும், தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிக்கும் எதிர்ப்புரட்சி நடவடிக்கையின் சீர்குலைவுகளையே இவை எடுத்துக்காட்டின.

> மின்சாரம் எரிபொருள் என்பன வடபகுதிக்கு நிறுத்தப்பட்டு பல மாதங்களாகிவிட்டது. உணவுப்பற்றாக்குறையால் மக்கள் அரைப்பட்டினியுடன் அவதியுறுகிறார்கள். போக்குவரத்து வசதி, வைத்திய வசதி முற்றும் ஸ்தம்பித்த நிலை, தொழில், விவசாயம் எதுவும் செய்யமுடியாத மக்கள் பெருங்கஷ்ட நிலைக்கு உள்ளாகியுள்ளார்கள்.

தொடர்ந்து நடந்து வரும் சண்டையில் யாழ்ப்பாண நகரம் பேரழிவுக்கு உள்ளாகிவிட்டது. மன்னார், சிலாவத்துறை இராணுவ முகாமை புலிகள் தாக்கியதைத் தொடர்ந்து வவுனியாவிலிருந்து இராணுவ படையெடுப்பு வன்னிப் பிரதேசத்தை முழு அழிவுக்கு உள்ளாக்கியதுடன், அந்தப் பிரதேச மக்களை பெருமளவிற்கு இடம்பெயரச் செய்துவிட்டது ஆனையிறவு இராணுவமுகாம் புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்து வடமாகாணம், வவுனியா சிங்களப்பகுதி தவிர இரண்டு கிழமைக்கு மேலாக ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்படுவதால் முழு வடக்கு மாகாணமும் இராணுவ முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. "லிபரேசன் பலவேகய" என்ற அரச படைகளின் இராணுவ நடவடிக்கை சண்டிக்குளத்தை அண்டிய வெற்றிலைக் கேணியில் கடல் மார்க்கமாகவும் ஆகாய மார்க்கமாகவும் தரையிறங்கிய முப்படைகள் அந்த இடத்தில் நிலைகொண்டு ஆனையிறவு முகாமை நோக்கி முன்னேறும் பாரியயுத்தமொன்றில் புலிகளுடன் ஈடுபட்டுள்ளார்கள். இதனால் இயக்கச்சி, பளை, தாளையடி கட்டைக்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் "பொம்பர்" "ஹெலி" குண்டுவீச்சு, ஷெல்லடி காரணமாக பாரிய அழிவுகளுக்கும் இடம் பெயர்வுகளுக்கும் உள்ளாகியுள்ளார்கள். வடமராட்சி, சாவகச்சேரி, மானிப்பாய், ஆகிய பகுதிகளில் சமீபக் குண்டு வீச்சினால் சமார் 100 பேர் வரை கொல்லப்பட்டும், கிட்டத்தட்ட 200 வீடுகள் அழிக்கப்பட்டும் உள்ளன.

இந்த அவல நிலையிலும் இதைக் கண்டித்து குரலெழுப்ப முடியாத அளவிற்கு, தமிழக மக்களும், இந்தியத் தலைவர்களும், உள்ளாக்கப்பட்ட சதிச்செயல் தமிழகத்தில் இடம்பெற்ற முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலையாகும். இந்த நீசச் செயல் தமிழினத்தை தலைகுனியச் செய்துள்ளதுடன் புலிகளின் எதிர்ப்புரட்சி சதிநாசச் செயலை உலகறியச் செய்துள்ளது.

யூகோசிலாவாகியா இனமோதலை தடுத்து நிறுத்தவும், குர்திஸ் மக்கள் சுயாட்சி உரிமை பெறவும், தலையிட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் ஐரோப்பிய சமூக நாடுகளுக்குக் கூட இலங்கையில் தமிழின ஒழிப்பு யுத்தம் ஒன்றில் ஈடுபட்டுள்ள சிறீலங்கா பேரினவாத அரசின் செயல்கள் கண்ணில் பட முடியாதது ஆச்சரியத்திற்குரிய சம்பவமாகும்.

இன்று எம்முன் உள்ள கடமை இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்ட இலங்கை இந்திய உடன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இன ஒழிப்பு யுத்தம் நிறுத்தப்பட்டு, பேச்சு வார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் என்பதாகும். இந்தியாவில் ஒருமாநிலத்திற்கு உள்ள உரிமைகளுக்கு குறையாத உரிமைகளுடன் தமிழினம் தன்னைத்தானே ஆளும் உரிமை, தமிழினம் தன்னைத்தானே தற்காத்துக் கொள்ளும் உரிமை, ஆகியவற்றை உள்ளடக்கிய எமது சுய நிர்ணய உரிமையை நிலைநாட்டிக்கொள்ளும் போராட்டத்தை இந்தியாவினதும் உலகத்தினதும் கவனத்திற்கு மீண்டும் கொண்டு வருவதேயாகும். ராஜீவ் காந்தியின் படுகொலையால் தமிழ் நாட்டிலும் இந்திய மக்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள கசப்புணர்வால் ஈழவிடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலைமைகளை உணர்ந்து கொள்ள முடியாமல் இருக்கும் நிலை எம்மைப் பொறுத்தளவில் பெரும் துர்ப்பாக்கியமான சம்பவமாகும்.

ஆகவே புலிகளின் சதிநாசச் செயலான தலைவர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவத்தால் இருள்மூடிப் போயுள்ள ஈழவிடுதலைப்போராட்டத்தின் உண்மை நிலையை மீண்டும் வெளிச்சத்திற்கு-கொண்டு வர வேண்டியது எம்முன்னுள்ள முக்கிய பணியாகும். எமது இன விடுதலைப் போராட்டத்திற்கு தமிழக மக்களதும், இந்திய மக்களதும் பேராதரவுக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டுவது எமது வரலாற்றுத் தேவையாகும்.

## இருள் சூழ்ந்த எதிர்காலம்

சமாதானப் புறா இன்று
சாகத்துடிக்கிறது
அராஜகத்தால் அறுக்கப்பட்ட
சிறகுகள்
குருதியில் மிதக்கின்றது.

விற்பனைசெய்யும் வியாபாரிகள்
விலையிறக்கம் செய்ததனால்
மரணங்கள் எம் தேசத்தின்
சந்தையில்
மலிவாகக் கிடைக்கின்றது.

சிந்தனைக் குருவி இப்போ
சிறகடித்துப் பறக்கின்றது
எம்தேசத்தை ஒரு தரம்
சுற்றி வருகின்றது.

இழப்புக்கள் இங்கு
இதயத்தைத் தொடுகின்றது
சகாராப் பாலைவனம்
எல்லோர் கண்களிலும்
தெரிகிறது;

எங்கள் சந்ததியின்
சாம்பல் மேடு
வானைத் தொடுவதற்காய்
வளர்ந்து வருகின்றன.

சிந்திய குருதியால்
எம்தேசம் சிவந்து நிற்கிறது
செய்கின்ற தியாகத்தால்
எம்தேசத்து மக்களின் - கண்கள்
சிவப்புகள் ஆகின்றன.

சரித்திரம் எழுதப்பட
வேண்டிய செங்குருதியை
தெருவோரத்து சாக்கடை
நீரோடு சங்கமிக்க
வைக்கிறது
அராஜக வாதிகளின்
ஆயுத வெறி

அராஜக வாதிகளின்
ஆதிக்க கரங்களில்
சிக்கித் தவிக்கும்
சிந்தனையாளர்களே;
புரட்சியாளர்களே;

ஒருகணம் அகக்கண்ணை
திறந்து தான் பாருங்களேன்
எங்கள் எதிர்காலம்
இருண்டு கிடப்பதை.

## செய்திச் சிதறல்கள்....

கொழும்பு மகசீன் சிறைச்சாலைக்குச் சென்ற வன்னி மாவட்ட ஈ.பி. ஆர். எல்.எவ். பாராளுமன்ற உறுப்பினர், கே.ஆர். குகனேஸ்வரன் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 300 தமிழ்பேசும் இளைஞர்களைச் சந்தித்தார். இதனைத்தொடர்ந்து 30 வடபகுதி இளைஞர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் வடபகுதியிலுள்ள நிலைமையினால் இவர்களை வந்துபார்க்கமுடியவில்லையெனவும் இதனை நிவர்த்தி செய்ய உதவுமாறு பல தொண்டர் ஸ்தாபனங்களுக்குக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுவரை நடந்த வன்முறைகளினால் 4,53,846 குடும்பங்களைச் சேர்ந்த 16 லட்சத்து 94,406 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். 15 மாவட்டங்களிலுள்ள 489 அகதி முகாம்களில் 85,000 குடும்பங்களைச்சேர்ந்த 2,13,458 பேர் உள்ளனர். 18 மாவட்டங்களிலுள்ள 489 அகதி முகாம்களில் யாழ் மாவட்டத்தில் 181 முகாம்களும், கிளிநொச்சியில் 3, வவுனியாவில் 3, மன்னாரில் 3, முல்லைத்தீவில் 28, திருகோணமலையில் 12, மட்டக்களப்பில் 66, அம்பாறையில் 27, பொலநறுவையில் 11, குருநாகலில் 32, அநுராதபுரத்தில் 52, புத்தளத்தில் 54, பதுளையில் 1, கொழும்பில் 12, மாத்தளையில் 4, அகதிகள் முகாம்கள் உள்ளன.

முகாம்களுக்கு வெளியே உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் 95,330 குடும்பங்களைச்சேர்ந்த 4,19,209 பேர் உள்ளனர். மேலும் இவ்வன்முறைகளினால் 2,23,453 குடும்பங்களைச் சேர்ந்த 10,61,658 பேர் பொருளாதார ரீதியில் பாதிப்படைந்துள்ளனர். இதில் யாழ்மாவட்டத்தில் மாத்திரம் 1,43,140 குடும்பங்களைச் சேர்ந்த 4,21,459 பேர் பாதிப்படைந்துள்ளதாக அரசினால் வெளியிடப்பட்ட கணிப்பீடொன்று தெரிவித்துள்ளது.

பொலநறுவை மாவட்டங்களின் எல்லையிலுள்ள புதூர் என்னும் முஸ்லீம் கிராமம் புலிகளால் தாக்கப்பட்டது. இத்தாக்குதலில் பெண்கள் குழந்தைகள் உட்பட 18 பேர் கொல்லப்பட்டனர். 6பேர் பலத்தகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதே நேரம் புதூரிலிருந்து நாலுமைல் தொலைவிலுள்ள கரும்பொல என்னும் சிங்களக் கிராமம் மீது புலிகள் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இதில் 11 கிராமவாசிகள் கொல்லப்பட்டனர். இப்படுகொலைகள் மனிதநேயம்கொண்ட அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டியதென ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குகனேஸ்வரன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட, வாழைச்சேனைக்கருகிலுள்ள திண்ணையடி என்னும் கிராமத்தில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது 14 அப்பாவி இளைஞர்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 12 பேருடைய சடலங்கள் உறவினர்களால் எடுத்து அடக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இருவருடைய சடலங்கள் படையினரால் ஆற்றில் வீசப்பட்டுக் காணாமல் போயுள்ளது. இச்சம்பவம் குறித்து ஈ.பி.ஆர்.எல். எவ். விடுத்த பத்திரிக்கை அறிக்கையில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள மாவட்டங்களில் அப்பாவிப் பொதுமக்கள் இனப்படுகொலைக்குத் தொடர்ந்து உட்படுத்தப்பட்டுவருவது வன்மையாகக்கண்டிக்கப்படவேண்டியதெனத்தெரிவித்துள்ளது

மலையகத்தில் மாத்தளைக்கும் கண்டிக்குமிடையிலுள்ள தலபோக்கத் தோட்டத்தில் இராணுவச் சீருடையணிந்த சிலர் லயன்களைச் சோதனை செய்யவேண்டுமெனக்கூறி ஐந்து லயன்களில் சுமார் 70 காம்பிராக்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

அம்பாறை மாவட்ட, அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு அகதி முகாமில் தங்கியுள்ள அகதிகள் எந்தவித நிவாரணமும், உணவுமின்றிப் பட்டினியால் வாடுகின்றனர். அரசிடமோ அல்லது சமூக சேவை நிறுவனங்களிடமோ தமக்கு நிவாரணம் பெற்றுத்தருமாறு இவ்வகதிகள் காந்திசேவா சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கடந்த வருடம் யூன் மாதம் ஆரம்பித்த மோதல்களின்பின் கணவன்மாரை இழந்த விதவைப் பெண்கள் 414 பேர் இவ் அகதி முகாமில் உள்ளனர்.

மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் கடும் வரட்சி நிலவுவதால் மடு அகதிகள் முகாமில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தண்ணீர் பற்றாக்குறை காரணமாக சுகாதாரம் சரியான முறையில் பேணப்பட முடியாதுள்ளது. இதனால் வயிற்றோட்டம் போன்ற வியாதிகள் பரவியுள்ளது. போதிய மருந்துகள் இன்றியும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இவ்வியாதிகளினால் யூன் மாதத்தில் மட்டும் 30 பேர் இறந்துள்ளனர். விசர் நாய் கடிகளினால் மாதம் சராசரி 6 பேர் இறந்து வருவதாக வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இம்முகாமில் 25,000 க்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியிருக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி பதுளை வீதியிலுள்ள பெரியபுல்லு என்னுமிடத்தில், மூன்று பெண்கள் உட்பட ஒன்பது தமிழ் பொதுமக்கள் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அரசபடைகளுக்குத் தகவல் கொடுத்தார்கள் என்ற சந்தேகத்தில் இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இச்சம்பவத்தின் போது ஒருவர் படுகாயமுற்று மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். புலிகளின் அராஜக நடவடிக்கைகளினால் விரக்தியடைந்தபலர் அரசபடைகளுக் உதவிவருவது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் வட பகுதியில் இடம்பெற்ற ஹெலி, பொம்பர், ஷெல் தாக்குதலில் 91 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 2000 மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. வடமராட்சிப்பகுதியில் 25 பேர் பலியானதுடன் சுமார் அறுபது வீடுகள் சேதமடைந்துள்ளன. மானிப்பாய் பகுதியில் 60 பேர் இறந்துள்ளதுடன் 44 வீடுகள் சேதமடைந்துள்ளன. சாவகச்சேரிப் பகுதியில் 6 பேர் இறந்துள்ளதுடன் 125 வீடுகள் சேதமடைந்துள்ளன.

கல்முனையில் அகதிமுகாமொன்றில் மின்சாரக் கோளாறு காரணமாகத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. முகாமில் நிலவிய தண்ணீர் பற்றாக்குறைகாரணமாக இத்தீயை அணைப்பதற்கு நீண்டநேரம் எடுத்ததாக அறியப்படுகின்றது. நண்பகல் 12 மணியளவில் தீ அணைக்கப்பட்டதாகவும், நான்கு குழந்தைகளும், ஒரு வயோதிபரும் இவ்விபத்தில் பலியாகியுள்ளதாகவும் மேலும் அறியப்படுகின்றது. எம். தில்லைநாதன்(6), எஸ்.ரவிக்குமார்(11/2) எம். சந்திரகுமார்(2), எஸ். ரஜனிகலா(2), எம். பூபாலப்பிள்ளை(70).

யாழ்நகரில் 12 பாடசாலைகளில் அகதிகள் தங்கியிருப்பதால் அப்பாடசாலைகள் இயங்கமுடியாத நிலையிலுள்ளது. இதனால் இப்பாடசாலையில் பயிலும் மாணவர்களுக்கு மாலை நேரங்களில் கல்விகற்பதற்கான மாற்று ஒழுங்குகளை யாழ் கல்வித்திணைக்களம் ஒழுங்கு செய்துள்ளது.

ஆனையிறவு மோதலில் புலிகளின் முக்கியஉறுப்பினர்கள் பரா, மூர்த்தி ஆகியோர் கொல்லப்பட்டதாக யோகி இந்துக்கல்லூரியில் புலிகள் நடாத்திய கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். ஆனால் மூர்த்தி என்பவர் புலிகளால் ஏற்கனவே கொலைசெய்யப்பட்டதாகப் பரவலாகப் பேசப்படுகின்றது.

www.padippakam.com

# தோழர்களின் நினைவுகளில்......

உன்னத தோழனே! மரணம் உன்னைப் பிரித்துவிட்டாலும் உனது அர்த்தபுஷ்டியுள்ள மகத்தான வாக்கியங்கள் எங்கள் காதுகளில் என்றும் ஒலித்துக்கொண்டிருக்கும். எத்தனை இடர்வரினும்அத்தனையையும் துச்சமெனமதித்து கட்சியைப் பலப்படுத்தி மக்களின் மகத்தானதலைமையாக வளர்த்தெடுக்க தோழர்கள் நாம் உறுதியுடன் இறுதிவரை போராடுவோம் என்பது உறுதி. உன்போன்ற தோழர்களின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் அனுபவபாடங்களாய் என்றும் உறுதுணையாய் நிற்கும்.

தோழர் ராஜன் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்களாலும் அவர்நேசித்த மக்களாலும் பாசத்துடன் அழைக்கப்பட்ட தோழர் ராஜனின் சொந்தப்பெயர் இரவீந்திரன். யாழ்மாவட்டத்திலுள்ள இருபாலை என்னும் ஊரில் சாதாரண பாசநேசமுடைய மத்தியதரவர்க்கக் குடும்பத்தில் பிறந்த தோழர் ராஜனின் உயர்கல்வி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலேயே தொடர்ந்தது. உயர்கணித பாடத்துறையில் கற்றுவந்த தோழர் ராஜன் சர்வசாதாரணமாகவே மாணவர்களுடன் ஆழமாகப்பழகுவதிலும், தனது அமைதியான பேச்சினாலும் சிரிப்பினாலும் இயல்பாகவே யாரையும் கவர்ந்துவிடுவார்.

பேரினவாத அரசின் அடக்குமுறைகளை தமிழ்பேசும் மக்கள் மீது மேற்கொள்வதற்காக வளர்ச்சியடைந்துவந்த அரசபடைகளின் படிப்படியான நடவடிக்கைகளை எதிர்த்தும், தமிழ் பேசும் மாணவர்களின் நலன்களைப் பாதிக்கக்கூடியவகையில் பேரினவாதஅரசு கல்வியில் கைவைக்கும் திட்டங்களை எதிர்த்தும், மாணவர்கள் ஆசிரியர்கள் எந்தவிதமான காரணமுமின்றி கைதுசெய்யப்படுவதை எதிர்த்து ஈழ மாணவர்களை பாரியஅளவில் அணிதிரட்டும் வேலைத்திட்டத்துடன் செயற்பட்டுவந்த ஈழமாணவர் பொது மன்றம் (GUES) என்னும் மாபெரும் மாணவர் இயக்கத்தின் நடவடிக்கைகளில், எழுபத்தொன்பதுகளின் காலப்பகுதியில் தோழர் ராஜன் ஈர்க்கப்பட்டு, ஈழமாணவர் பொதுமன்றத்துடன் தன்னைஇணைத்துக்கொண்டார்.

தோழர் ராஜன் ஈழமாணவர் பொது மன்றத்தின் அரசியல் பணிகளை அதிக அக்கறையுடனும், பொறுப்புடனும், விசுவாசத்துடனும் மேற்கொண்டார். இவருடைய திறமையும் செயற்பாடும் ஈழமாணவர் பொதுமன்றத்தின் நிர்வாகக் குழுஉறுப்பினர்களின் ஒருவராக இவரை ஆக்கியது.

இக்காலகட்டங்களில், குறிப்பாக யாழ்மாவட்டத்திலுள்ள உயர்கல்வி மாணவர்கள் மத்தியில் அர்த்தபுஸ்டி உடையதாகவே இருந்தது. ஈழமாணவர் பொதுமன்றத்தின் வெகுஜனப்போராட்டங்களுக்கு மாணவர்களை அணிதிரட்டும் வேலைத்திட்டத்தில் தோழர் ராஜன் எப்போதும் அதிகஅக்கறை எடுத்துக்கொண்டவர்.

தமிழரசுக்கட்சி நடாத்திய சத்தியாக்கிரகபேரணிக்கு அடுத்துஇடம்பெற்ற மாபெரும் வெகுஜனப்பேரணியெனக் கணிக்கப்பட்ட யாழ்சென்ஜேம்ஸ் ஆலயத்தில் இடம்பெற்ற உண்ணாவிரதத்தையும் அதனுடன் தொடர்ந்து இடம்பெற்ற பாரிய வெகுஜனப்பேரணியையும் திறம்பட மேற்கொள்வதற்காக, கோப்பாய் தொகுதியில் உள்ள உயர்கல்வி மாணவர்களை அணிதிரட்டி அவ்வெகுஜனப்போராட்டத்தில் கலந்துகொள்ளச் செய்வதற்கு தோழர் ராஜன் மேற்கொண்ட முன்னேற்பாடுகளும், பணிகளும் மகத்தானவை.

போராடுவதற்காக கற்றுக்கொள்ளவும் கற்றுக்கொள்வதற்காக போராடவும் தெரிந்துகொண்ட தோழர் ராஜனிடம் புரட்சியாளனுக்குரிய ஒழுங்குமுறையான நேர்மையான குணாம்சங்கள் வளர்ச்சியடைந்திருந்தமையால் தோழர் ராஜன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினராகும் தகுதியை குறுகியகாலத்துக்குள்ளேயேபெற்றுக்கொண்டார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வெகுஜனப்பிரிவுகளை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி ஆழப்படுத்தும் வேலையை தோழர் ராஜன் துரிதமாக மேற்கொண்டார். குறிப்பாக ஈழவாலிபமுன்னணி (EYF) ஈழப்பெண்கள் விடுதலைமுன்னணி (ELF) ஆகியவெகுஜன அமைப்புகளை மக்கள்மத்தியில் விரிவுபடுத்துவதிலும் அதற்கானதோழர்களை அரசியல் ரீதியாகவளர்த்தெடுப்பதிலும் அயராது உழைத்தார்.



இக்காலகட்டத்திலே குறிப்பாக கோப்பாய் தொகுதியிலே பரவலாக வாழ்ந்துவரும் ஒடுக்கப்படும் வறிய கூலிவிவசாயிகளை அணிதிரட்டுவதிலும், தோழர்கள் பலரை உருவாக்குவதிலும் தோழர் ராஜன் அரும்பங்காற்றினார்.

எமது ஸ்தாபனத் தோழர்களினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மக்கள்மத்தியில் விற்பனை செய்வதன் மூலம் ஸ்தாபனத்தின் பொருளாதார நெருக்கடிகளை தீர்ப்பதில் அதிகஅக்கறையுடன் ஏனைய தோழர்களுடன் இணைந்து தோழர் ராஜன் செயற்பட்டார். எந்தவகையான ஸ்தாபனவேலைத்திட்டங்களானாலும் தனது துவிச்சக்கரவண்டியிலேயே பிரயாணத்தை மேற்கொள்வார்.

பேரினவாதஅரசுக்கெதிராக போராடிக்கொண்டிருக்கும் ஒடுக்கப்படும் தேசியஇனம் தனது இனத்துக்குள் இருக்கின்ற மக்களின் சமூகபொருளாதார அடிப்படையிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை களைவதற்கான அரசியல் போராட்டத்தையும் முன்னெடுக்கவேண்டும் என்ற ஸ்தாபனத்தின் நிலைப்பாட்டில் தோழர் ராஜன் அதிகஅக்கறையுடன் ஈடுபாடுகொண்டிருந்தார். சிறுப்பிட்டி மக்களின் சமூக பொருளாதார உரிமைப்போராட்டம் கைதடியில் சிறுபான்மை பெரும்பான்மை மக்களிடத்தில் சமூக பொருளாதார அடிப்படையில் உருவெடுத்த சாதியச்சண்டைகள் போன்றசம்பவங்களில் தோழர் ராஜனின் நேரடிப்பங்கு அவரின்திறமைக்கு எடுத்துக்காட்டு. மக்களுடனான விடயத்தை மிகவும் மென்மையாகவே தோழர் ராஜன் கையாள்வார்.

இராணுவத்தின் கெடுபிடிகளிலிருந்து தப்பித்து தலைமறைவுவாழ்க்கை மேற்கொண்டுவந்த தோழர் ராஜனை, சர்வதேச அனுபவங்களை கற்றுக்கொள்வதும் எமது போராட்டத்தின் தன்மைக்கேற்ப அதனைப்பிரயோகிப்பதும் இன்றியமையாததென்பதற்கிணங்க சர்வதேச விடுதலை இயக்கமொன்றின் அழைப்பிற்கிணங்க ஸ்தாபனம் தோழர் ராஜனை அனுப்பிவைத்தது.

சர்வதேச தோழமை அமைப்பின் போராட்ட அனுபவங்களைக் கற்றுக்கொண்டு ஏனையதோழர்களுடன் தோழர் ராஜன் தாயகம் திரும்பினார். மக்கள் விடுதலைப்படையின் (PLA) பயிற்சிமுகாமில் ஏனைய தோழர்களுக்கு தனது அனுபவச்செழுமையை கற்றுக்கொடுக்கும் வேளையில் துரதிஷ்டவசமாக எம்மிடமிருந்து அந்த உன்னததோழனை மரணம் பிரித்துவிட்டது.

மரணத்துடன் போராடிய அந்த இறுதி நேரத்திலும்கூட அவரது வாயிலிருந்து வெளிவந்த வாக்கியங்கள் ....

**கட்சியைப்பலப்படுத்துங்கள்!**

**கட்சியைப்பலப்படுத்துங்கள்!!**

மக்களுக்காக தலைமைதாங்கக் கூடியவாறு எமது ஸ்தாபனம் பலப்படுத்தப்படவேண்டும் என்பதே அவரின் உன்னத குறிக்கோளாக என்றும் இருந்துவந்துள்ளது.

## நாபாதோழர் நமக்கெல்லாம் தோழர்!!

1991.06.19.

சிந்தையில் -
பேரிடி தாங்கிய தேதியே
சென்ற வருடம்
நீயேன் உதித்தாய்?
எங்கள் -
செந்தமிழ்த் தோழரைக்
கொல்லவோ? அன்றி
சீறிடும் புலிகளின்
இழிசெயல் கூறவோ?

தோழனே நீயும்
துயிலா கொண்டாய்?
துடிக்குது நெஞ்சு!
துடிக்குது நெஞ்சு!
நிமிர்ந்த நடையும்
நேரிய பார்வையும்
திரண்ட தேகமும்
செவ்வாயைப் பெற்று,
தலைமைத்துவத்திற்குச்
சான்றுகள் தந்தோனே

நேசநாடு -
பாரதம் என்றாய்!
நீசர்கள் அங்கும்
நிழல்போல் வந்தரே!
பிறந்த மண்ணைப்
பிரிந்து சென்று,
அந்நிய மண்ணில்
அநீதியாய்ப் போனாய்!

தோழர்கள் உன்னொடு
துடிதுடித் திறந்த
இருண்ட நாளினை
இதயம் மறக்குமோ?

தமிழருக்காகத்
தவிப்பதாய்க் காட்டும்
தலைவர்கள் எல்லாம்
தகராறு செய்திட,
முடிவொன்று எடுத்தாய்
விடிவினைத் தந்திட,
விடிவொன்று வருமுன்
உன்கதை
முடித்தாரே!

கிழக்கு மண்ணில்
உந்தன் பிரிவு
விளக்கிட முடியா
வேதனை தந்தது!
அமைதியைத் தோற்ற,
அல்லலைத் தீர்க்க,
இனத்தினை ஒன்று
இணைத்திட முயன்று
உன்சுகம், உன்வாழ்வு,
உன்பசி, உன்தாகம்
மறந்து திரிந்து
"மனிதனாய்" வாழ்ந்த
உன்னையா கொன்றார்
உள்ளம் வெடித்ததே!

நாபா தோழர்
நமக்கெல்லாம் தோழர்!
ஆசான் என்று
ஆணவம் கொண்டிலை!
தலைவன் என்ற
தலைக்கனம் உனக்கிலை

மனித வேட்டையில்,
மாசகம் கொள்பவர்
புனிதன் உனையுமா
பொசுக்கினார் ஐயா?

அமைதி பிறந்திட
அவனி மலர்ந்திட
இளமை வயதிலே
எத்துணை செய்தாய்?

இன்றோ -
சமாதிக்குள் நீ
சங்கமமானாய்!
ஆனால் கூட,
உன் கல்லறை மீது
வீசிடும் காற்று
கனலாய் மாறி
கயவரை எரித்திடும்!
உன்வழி நடந்திட
தோழர்கள் உறுதி

ஒருநாள் பகைவரை
வேரோடு சாய்க்கும்!
ஆயுதம் ஏந்தா
அரிவையென் பேனா
கூரிய சொற்களால்
கொலைஞரைக் குதறும்!

உன்னைக் கொன்றவர்கள்
உள்ளம் சிரிக்கலாம்!
உலகினில் அவருனைப்
போல்வர லாகுமோ?
உன்னைக் கொன்றதால்
உறுதியாய் நிற்கலாம்!
உன்படை ஒருநாள்
எழுவதை அறிவரோ?

எமதன்புத் தோழரே!
இனிய பத்மநாபாவே!
நீ -
கொண்ட கனவு,
கொள்கைகள் உறுதி
யாவையும் ஒருநாள்
யதார்த்தமாய்ப் போகும்!

இயலாமையின் ஏமாற்றத்தில்
இமயமாய் நின்ற
உன்னை வீழ்த்தினார்!
இல்லறத் துணைவி
ஆனந்தி வாழ்வை
எத்துணை விரைவாய்
இவர்கள் பறித்தார்?

அநீதியால் அமைதி
வருவது இல்லை!
அறியாத வெறியரால்
ஆவதோ தொல்லை!
அறிவுடன் செயற்பட
நீயிங்கு இல்லை!

ஆனாலும் உண்மைகள்
அழிவது இல்லை

மனிதா நீதான்
மரணித்தாய் -
மறைந்தா போனாய்!
எங்கள்
மனங்களில் நிறைந்து
வாழுகின்றாய்!

கண்ணீர்ப் புஷ்பங்கள்
சரமாய் ஆகுது!
உன் கல்லறை செல்ல
சிறகுகள் தேடுது!

★ ★ ★ ★

தவிர்க்க முடியாதகாரணத்தால் இம்முறை அரசியல் அழிவுகளும்........ வெளிவரவில்லை. அடுத்தவெளியீட்டில் தொடர்ந்துவரும்.

# சுவிஸில் கத்திக்குத்து...... புலிகளின் வீரத்தாக்குதல்கள்

வடக்கு கிழக்கில் தமிழ்பேசும் மக்களை பட்டினிச்சாவுக்கு இட்டுச்சென்றதோடு அவர்களை அரசியல் அனாதைகள் ஆக்கிவிட்ட புலிகள் வெளிநாடுகளிலும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தமது அராஜகப் போக்குகளை தொடர்ந்தே வருகின்றனர். அண்மையில் சுவிஸில் உள்ள சுக் நகரில் பலவந்தமாக பணம் சேர்ப்பதில் ஈடுபட்டிருந்த மகேந்திரம், நாகேஷ், சிவநேசன் ஆகியபுலிப்பொறுப்பாளர்கள், பணம்கொடுக்கமறுத்த நான்கு தமிழ் அகதிகளை கத்தியால் குத்தியுள்ளனர். படுகாயங்களுக்குள்ளான இவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். பலவந்தமாக பணம்கேட்ட புலிகளுக்கு தாம் பணம் கொடுக்கமறுத்ததால் புலிகள் கத்தியால் குத்தியதாக தாக்கப்பட்டவர்கள் கொடுத்த வாக்குமூலத்தைத் தொடர்ந்து பொலிசார் உசார் அடைந்துள்ள காரணத்தால் சுவிஸில் புலிகளுக்கு பலத்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com


# வாசகர் பார்வையில்

திரு.சுகந்தன் அவர்களுக்கு,

காலத்துக்குக் காலம் கொள்கையை மாற்றிக்கொண்டு சந்தர்ப்பவாத அரசியலை மேற்கொண்டு வரும் கட்சியல்ல ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி. இந்தியாவுடனான உறவில் தீர்க்கமான தெளிவுடனேயே எமதுநிலைப்பாட்டை பேணிவந்துள்ளோம்.

இந்தியா அணிசேராக் கொள்கையில் இறுக்கமாக இருக்கும்வரை, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அங்கமாக இல்லாதவரை இந்தியாவுடனான எமதுநட்பு தொடர்ந்து பேணப்படும் என்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமுமில்லை.

இலங்கைமீதான இந்தியாவின் தலையீடு என்பது அரசியல் பூகோளரீதியில் தவிர்க்கமுடியாதது. இலங்கைத் தமிழ்பேசும்மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளில்,தமிழ்பேசும் மக்களுக்கு கிடைக்கக்கூடிய லாபங்களை,பிரயோசனங்களை தட்டிக்கொள்வதே அரசியல் தந்திரோபாயமாக இருக்கமுடியும். இதைவிடுத்து வெறுமனே யதார்த்தத்தை ஒதுக்கிவைத்துவிட்டு இந்திய எதிர்ப்புவாதத்தை கக்குவதால் தமிழ்பேசும்மக்களுக்கு எந்தவிதலாபமும் கிட்டாத அதேவேளை பெரும் அழிவுக்கே இட்டுச்செல்லும் என்பது அனுபவவாயிலாக தெரிந்துகொண்ட உண்மையாகும்.

ராஜீவ் தொடர்பான தமிழ்பேசும் மக்களுடனான உறவையே நாம் பார்க்கமுடியும்.மாறாகஇந்திய உள்விவகாரங்களைப்பற்றியல்ல. இந்திய உள்விவகாரங்களில் குறிப்பாக பஞ்சாப், காஷ்மீர், அசாம் மாநிலப்பிரச்சனைகள், இந்தியாவில் ஸ்திரமின்மையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் யாரால் தோற்றுவிக்கப்பட்டன, ஏன் தோற்றுவிக்கப்பட்டன என்பதும், இந்நடவடிக்கைகள் இந்திய உபகண்ட அமைதியோடு எவ்வளவு தொடர்புடையவை என்பதையும் பார்க்கவேண்டும்.

தமிழ்பேசும்மக்களின் இனப்பிரச்சனை தொடர்பாக இந்திய ஆட்சித்தலைமைகள் மேற்கொண்ட கடந்தகால நடவடிக்கைகளில், தமிழ்பேசும் மக்களுக்கு ஓரளவேனும் பிரயோசனம், நன்மை அளிக்கக்கூடிய இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் காரணகர்த்தா ராஜீவ் ஆகும்.இதில் இந்தியநலன் கலந்திருப்பினும் தமிழ்பேசும் மக்களுக்குபிரயோசனம் அளிக்கக்கூடியஒப்பந்தத்தை உருவாக்கியவராகையால் ராஜீவ் தமிழ்பேசும்மக்கள்பால் அக்கறை கொண்டிருந்தவரே. இதுதவிர ஒரு தேசியமுதலாளித்துவ தலைவரிடமிருந்து பெரிதாக எதையும் நாம் எதிர்பார்க்க முடியாது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் அகப்புறச் சூழ்நிலைகளால் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படமுடியாமல் போனதென்பதும், இவ்வொப்பந்தத்தின் பிரயோசனங்களை தமிழ்பேசும் மக்கள் பெற்றுக்கொள்வதற்கு புலிகள் எவ்வாறு தடையாக இருந்தார்கள் என்பதெல்லாம் கவனத்தில்கொள்ளப்படவேண்டியவை.

ராஜீவ் மீண்டும் அரசுப்பொறுப்பேற்றால் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும், மக்கள் சகஜவாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கப்படும், இதனால் தமக்கு நெருக்கடிகள் ஏற்படுமென அஞ்சிய சக்திகளின் ஏவலினால் அரசியல் வறுமைகொண்ட புலிகள் ராஜீவை கொலைசெய்ததன்மூலம் ராஜீவ் தமிழ் மக்கள் உறவு வெளிப்படையாகிறது.

ராஜீவ் அரசுமாற்றத்தின் பின்வந்த வி.பி.சிங், சந்திரசேகர் போன்றோர் தமிழ்பேசும்மக்கள் தொடர்பாக என்ன நிலைப்பாட்டை எடுத்துள்ளனர் என்பதைப் பார்க்கும் போது ராஜீவ் தமிழ்பேசும் மக்கள் தொடர்பு தெளிவாகிறது.

இந்தியாவின் தலையீடு இல்லாமையால் சர்வஉலகமே இன்று எமதுபிரச்சனையில் மௌனமாகிப்போனதும்,அதனால் இலங்கை இனவெறிஅரசு வெறியாட்டம் ஆடுவதும், நமதுமக்கள் அனாதரவாகிப் போனதும் இன்று நாம்காணும் யதார்த்த உண்மைகளாகும்.

ஆ.கு

★ ★ ★ ★ ★ ★ ★

உங்கள் பத்திரிகை தொடர்ச்சியாகக் கிடைக்கப்பெற்று வாசித்துவருகின்றேன். இறுதியாகவெளிவந்த புதியபார்வை - 4இல் வெளிவந்த வாசகர் பார்வையில் என்னும்பகுதியை ஒதுக்கி எம்மைப்போன்ற வாசகர்களை பத்திரிகையுடன் பிணைப்பை ஏற்படுத்தியுள்ள உங்கள்முயற்சிக்கு எமதுபாராட்டுக்கள். புலிகளின் பாஸிசத்தின் உச்சக்கட்டத்தின் வெளிப்பாடாக அமைந்துவிட்ட திருமதி. ரஜனிதிரணகமவின் படுகொலைக்குக் காரணமாக அமைந்துவிட்ட (THE BROKEN PALMYRAH) முறிந்த பனை என்னும் நூலினை தொடர்ந்து வெளியிடுவீர்களாயின் கடந்தகாலத்தைப்பற்றிய உண்மைகள் பலருக்குத் தெரியவரும்.

மேலும் உங்கள்கட்சிதொடர்பாக எனது கருத்துக்களை கூறவிரும்புகிறேன். எண்பதுபிற்பகுதிகளிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆனது தேசியஒடுக்குமுறைக்கெதிராகவும் அப்போராட்டத்துடன் இணைந்த சமூகமாற்றத்திற்கான போராட்டத்தையும் முன்னெடுக்கும் ஸ்தாபன வடிவமாக தன்னை அமைப்புரீதியாக விரிவுபடுத்தமுனைந்தது என்பது ஈழத்தின் உழைக்கும் தொழிலாளவர்க்கத்துடன் அமைப்புகளைக்கட்டி போராட முனைந்தது என்பதும் ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். மேற்கொண்ட வேலைத்திட்டங்களில் முன்னோக்கிய விடயங்களாக கருதமுடிவதோடு ஏனைய இயக்கங்களிலிருந்து தன்னை இனம்பிரித்தும் காட்டிக்கொண்டது.

ஆனால் குடாநாட்டில் நீங்கள்அணிதிரட்டிய தொழிலாளவிவசாயிகளாக இருக்கக்கூடிய சாதிஅடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களை உங்களின் நலன்களுக்காகத்தான் அணிதிரட்டினீர்கள், சும்மாயிருந்த சாதிப்பிரச்சனையை கிளப்பிவிட்டுள்ளீர்கள் போன்ற கருத்துக்கள் வெளிநாடுகளில் எம்மவர்களால் குறிப்பாக பத்திரிகை உலகத்துடன் தொடர்புடைய புத்திஜீவிகள் என்று தம்மை தம்பட்டமடித்துக்கொள்ளும் பலரும் உங்கள்மீது குற்றம்சுமத்துகிறார்கள். இதுவே உங்கள் உயரிய வேலைத்திட்டத்தை படம்பிடித்துக்காட்டுகிறது.

நீங்கள் இந்தியப்படைகளுடன் இணைந்து செயற்பட்டகாலத்திலும் மாகாண அரசுஅமைக்கப்பட்டகாலத்திலும் குடாநாட்டில் புலிகளால் உங்களைப் பலவீனப்படுத்துவதற்காக, மக்களிடமிருந்து அந்நியப்படுத்துவதற்காக பாவிக்கப்பட்ட அதிசக்திவாய்ந்த ஆயுதம் சாதிப்பிரச்சனையே. அன்று மாகாணசபையையும் உங்களையும் கலைப்பதற்கு புலிகளின் இப்போலிப்பிரச்சாரங்களுக்கு முண்டுகொடுத்த முதலாளித்துவ ஊதுகுழல் பத்திரிகைகளும், சித்தாந்தவித்தகர்களும் தூவிவிட்ட பொய்ப்பிரச்சாரங்களில் ஏமாந்துபோன மக்கள், மாகாணசபையும் ஏற்பட இருந்தஅமைதி வாழ்வும் இடைவெளியாகிப் போனதை நினைத்து மனம்வெதும்புவதே உங்கள் அரசியல் வெற்றியாகும்.

ஆனால் மறுபுறமாக இந்தியஅமைதிப் படையினர் இருந்தகாலகட்டத்தில் குறிப்பாக குடாநாட்டில் எந்தவிதமான வர்க்கப்பார்வைக்குள்ளும் அடக்கப்படமுடியாத உங்களது சிலதனிநபர்களின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியஅளவுக்கு ஆங்காங்கே இருந்தது என்பதும், இவர்களின் நடவடிக்கைகள் மக்கள்மத்தியில் ஏற்படுத்திய பாதிப்புகள், உங்களது நல்லஅரசியல் முயற்சிகளை அர்த்தமற்றதாக்கிவிட்டது. இத்தனிநபர்கள் விடயத்தில் உங்களது கவனக்குறைவு உங்கள் பெரும் குறைபாடாகும்.

அதேவேளை புலிகளின் சாதிப்பிரச்சாரத்தினால், ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்துவந்த உங்களது உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் வேலைசெய்யும்போது அவர்களை வித்தியாமானமுறைகளில் பார்த்து அணுகியதால் ஏற்பட்ட பிரச்சனைகளை ஒரேபார்வையில் பார்க்கமுடியாது என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறேன்.

இப்படியான பலவித்தியாசமான கோணங்களிலிருந்து உருவாகிய பிரச்சனைகளையும், உங்கள் கட்சிமீதான பல சந்தேகங்களையும் உங்கள் எதிர்கால வேலைத்திட்டங்களையும், எமதுமக்கள் மத்தியில் விரக்தியும் அவலநிலையும் அழிவுகளுமே நாளாந்தநடைமுறைகளாகிவிட்ட நிலையில் அவர்கள் அமைதியான, சுதந்திரமான, பாதுகாப்பான நிலைக்குவருவதற்கு உங்கள் தற்போதைய அணுகுமுறைகள் எவ்வாறு உள்ளன போன்றவற்றை புதியபார்வையில் தெளிவாக எழுதுவீர்களாயின் என்போன்ற வாசகர்களுக்கு மேலும் தெளிவு பிறப்பதோடு, உங்களுக்கெதிராக வேண்டுமென்றே சேறடிக்கும் நோய்க்குணம் கொண்டவர்களின் பொய்பிரச்சாரங்களினால் தடுமாறிப்போயிருப்பவர்களுக்கும் பெரிதும் உதவும் என்று நம்புகிறேன்.

சாள்ஸ் (கொலண்ட்)

வாசகர் பார்வையில் சுகந்தனின் பார்வையைபார்த்தேன். சும்மாசொல்லக்கூடாது சுகமாகப்பார்த்து விட்டார். ஒருநாட்டின் பிரதமரின் செயற்பாடுகளை எப்படி ராஜீவின் செயற்பாடுகளாக கணக்கிலெடுக்கமுடியும். கூடாத பக்கங்கள்போல் நல்லபக்கங்களும் இருக்கும்தானே. கட்டுரையில் சொல்லப்பட்டவைகளுடன் உடன்பாடு இல்லாதிருந்தால் ஏற்கலாம். ஆனால் முரண்பாடு என்று முரண்டுபிடிப்பதை எப்படிஏற்றுக்கொள்வது. வாசகருக்கும் கட்டுரையாளருக்குமுள்ள அரசியல் இடைவெளி அவரின் பார்வைமூலம் தெரிகிறது.

இயற்கையான எல்லைகளையுடைய இருவேறு நாடுகளாக இந்தியாவும் இலங்கையும் இருக்கின்றன. ஆனாலும் இங்கு வாழும் மக்கள் நாகரீகம், பண்பாடு, சமயம், மொழி, கலை, கலாச்சாரம், அரசியல்போன்ற சமூகத்தொடர்புகளால் பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளனர் என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இதனால் இவர்களுக்கிடையில் ராஜரீக உறவுகள் மட்டுமன்றி தார்மீக உறவுகளும் ஒருவகையான பாசஉணர்வுகளும் இருக்கின்றன. இவை இன்றுநேற்று ஏற்பட்டதல்ல. வரலாற்றுக்காலங்களுடன் இறுக்கமானது.

இந்த அடிப்படையில்தான் இன்றும் இலங்கையை சேய்நாடென்றும் இந்தியாவை தாய்நாடென்றும் நினைத்துவாழும் மக்கள் இன்றும் எங்கள் மத்தியில்வாழ்கின்றார்கள். குறிப்பாக இந்தியாவின் தென்பகுதிக்கும் இலங்கையின் வடபகுதிக்கும் இடையில் ஒருவிதமனோவியல் ரீதியான எண்ணமும் எதிர்பார்ப்புகளும் உண்டு. இவைகளை உறுதிசெய்வது போன்று இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்கள், தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் இந்தியமக்களின் தார்மீகஉறவுகளை நெகிழ்வுபடுத்தியுள்ளன. அதேநேரம் இந்திய சமூக அரசியல் மாற்றங்களும் எமதுசமூகத்தில் தாக்கங்களைஏற்படுத்தியுள்ளன. இப்படியான ஒரு யதார்த்தப்புலத்தின் தளத்திலிருந்தே ஈழவிடுதலைப் போராட்டத்திற்கான எதிர்பார்ப்புகளும் இருந்தன.

ஈழவிடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் தலையீடு வெறுமனே அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்கப்படமுடியாதது. சமூகக்கண்ணோட்டத்துடன் தொடர்புபட்டது. தமிழ்நாட்டுமக்களது உந்துவிசையும்,ஆதரவுகளும் இந்திய மத்தியஅரசு இலங்கை இனப்பிரச்சனையில் தலையிடவேண்டுமென்ற வேண்டுகோளுக்கான ஆர்ப்பாட்டங்களுமே மத்தியஅரசை விழிக்கச்செய்தது. இந்த எழுச்சிகளின் உச்சக்காலகட்டத்தில் இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருந்த நாட்டின் பிரதமர் என்றமுறையில் ராஜீவ் இதில்தலையிடவேண்டியது தவிர்க்கமுடியாததே. ஆகவே இவரின் செயல்கள் பொறுப்பானவையாகவே கருதப்படவேண்டும்.

இந்தியாவின்தலையீட்டில் சிறிதளவே தமிழ்பேசும்மக்களின் நலன் தங்கியுள்ளது என்றுபார்த்தபார்வையாளர் அந்தச் சிறிதளவு நலன் என்னவென்று கூறவில்லை.

ஆக்கபூர்வமாக எதையும்செய்யாமலும் போராட்டச் சூழல்களிலிருந்துவிலகிக்கொண்டு ஆக்கிரமிப்பு, ஆதிக்க வெறி என்ற வெற்றுச்சுலோகங்களை தூக்கிப்பிடித்துக்கொண்டு வெறுமனே இந்திய எதிர்ப்புவாதத்தைக் கக்குபவர்களின் குகைகளிலிருந்தோ சுகந்தனும் பார்க்கிறார் என்றஐயப்பாட்டைத்தோற்றுவிக்கிறது.

வசந்தகுமார் (லண்டன்)

★ ★ ★ ★ ★ ★ ★

## சொல்லவும் வெட்கமடா

இராணுவத்தில் சேர்ப்பதற்கு ஆயிரக்கணக்கில் சம்பளமும், இறந்தால் இலட்சக்கணக்கில் சன்மானமும் என்ற அரசஅறிவித்தலைக்கண்டு வேலையற்று பட்டினியால்வாடும் சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேருகிறார்களாம். இவர்கள் இறந்தாலும் வீட்டுக்கு அறிவிக்கப்படாமல் மாதாமாதம் சம்பளப்பணம் அனுப்பப்படுகிறதாம். பிள்ளை போர்முனையில் என்று பெற்றோர் வீரதிருப்திப் பட்டுக்கொள்கிறார்களாம்.

பவுண்தானம், பணத்தானம், காணிஉறுதி அறுதிதானம் என்று குடாநாட்டில் மக்களிடம் கப்பம்பெற்று அரசோச்சிவரும் மாவீரர்கள் இப்போது பட்டினியால் வாடும் மக்களிடம் இரத்ததானம் பெற்று வருகிறார்களாம். போராட்டத்தையே வியாபாரமாக்கியவர்களுக்கு இரத்தத்தை வியாபாரம் செய்ய சொல்லியா கொடுக்கவேண்டும். ஏச்சுப் பிழைக்கும் தொழிலே சரிதானா... இது சரிதானா...

வளைகுடா யுத்தப்பாணியில் வர்ணிக்கப்பட்ட ஆனையிறவுயுத்தம் தோல்வியுடன் முடிவடைந்து விட்டது. பச்சிளம் பாலகர்கள் வலுக்கட்டாயமாக பலிகொடுக்கப்பட்டார்கள். அல்லது சயனைட் அருந்திக் கொண்டார்கள். தப்பியோடியவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவயவங்களை இழந்த சிறுவர்கள் அனாதரவாக மீண்டும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் சிங்களக்கிராமங்களில் புகுந்து சங்காரப்படுகொலைசெய்து வரும் ஜீவகாருண்ணியம் கொண்ட மா..மாவீரர்கள், ஆனையிறவில் காயமடைந்த இராணுவசிப்பாய் ஒருவரை பாதுகாப்பாக யாழ்/ஆஸ்பத்திரிக்குகொண்டு வந்து சிகிச்சையளித்து வருகின்றனர். இனிமேல் என்ன அரசும் புலிகளும் இந்த இராணுவசிப்பாய் தொடர்பாக பேச்சுவார்த்தை,செஞ்சிலுவைச்சங்க மத்தியஸ்தம் என்று தொடரும். பத்திரிகைகள் யாவும் மாவீரர்களின் ஜீவகாருண்ணியம் பற்றி பறைசாற்றும். ஆனையிறவு தோல்வி மெல்லமெல்ல மறைக்க,மறக்கப்படும். காலம் செய்யும்விளையாட்டு... இதுகண்ணாம்பூச்சி விளையாட்டு...

சென்றியில் வயோதிபர்களை வலுக்கட்டாயமாக நிறுத்துகிறார்களாம் மாவீரர்கள். போராட்டமென்றால் வயதெல்லாம் பார்க்கேலாது என்று சித்தாந்தம் வேறாம். ஹெலியோ,பொம்பரோ வந்து சுட்டால் பலிபோகவேண்டியது சுடத்தெரியாத வயோதிபர்கள். அடுத்தநாள் பத்திரிகையில் பொம்பர்தாக்குதலில்புலிகள் வீரமரணம் என்று வருகிறதாம். ஆட்பற்றாக்குறையை நிவர்த்திசெய்யவும் எஞ்சியுள்ள மாவீரர்களை பாதுகாக்கவும் இப்படியொரு யுக்தியாம். சோதனைமேல் சோதனை போதுமடா சாமி... வேதனைதான் வாழ்க்கையென்றால் தாங்காது பூமி...

படிப்பகம்

# முறிந்த பனை 3



திருமதி ரஜனிதிரணகம,மூன்றுவிரிவுரையாளர்களுடன் சேர்ந்துஎழுதிவெளியிட்ட "THE BROKEN PALMYRAH" (முறிந்தபனை என்னும் நூலின் தமிழாக்கத்தின் சிலபகுதிகள் 'விடுதலை' பத்திரிகையில் 01.01.1990.முதல் வெளிவந்துள்ளது.அதனை தொடர்ச்சியாக இங்கே மறுபிரசுரம் செய்கிறோம்.

இந்நூலை எழுதிவெளியிட்டதன் காரணமாகவே ரஜனி கொலைசெய்யப்பட்டார். யா/பல்கலைக்கழக மருத்துவபீட உடற்கூற்றியல்துறை தலைவராக இருந்த திருமதி ரஜனிதிரணகம, தமது சகோதரியான திருமதி நிர்மலாநித்தியானந்தன் போலவே புலிகள்இயக்கத்திலிருந்து முரண்பட்டு வெளியேறியவர். தமது அமைப்பிலிருந்து முரண்பட்டுவெளியேறி, விமர்சிப்பவர்களுக்கு புலிகள்வழங்கும் தண்டனை,இவருக்கு 35 ஆவது வயதிலேயே வழங்கப்பட்டது.

## மக்கள் இன்னமும் தங்கள்எதிர்ப்பினை மௌனமாகவே தெரிவிக்கின்றனர்.

மே 28 அளவில் திசை திருப்பும் தாக்குதல்கள் பலாலியிலும், நாவற்குழியிலும் மேற்கொள்ளப்பட்டன. மன்னார் மாவட்டத்துக்கான புலிகளின் தளபதி கேணல் ராதா நாவற்குழி சண்டையில் உயிரிழந்தார். முன்னாள் வங்கி ஊழியரான ராதா துணிவுக்குப் பேர் போனவர்.

பலாலியிலிருந்து அச்சுவேலி நோக்கி இடைக்காடு ஊடாக இலங்கை இராணுவத்தினர் துரிதமாக முன்னேறினர். படையினர் நகரத்தொடங்கியபோது புலிகள் இயக்கம் அப்பகுதியில் 15 உறுப்பினரைக் கொண்டிருந்தது. அதிகமானவர்கள் மேலும்வாகனங்களில்கொண்டுவந்து இறக்கப்பட்டு படையினர் முன்னேறுவது கடினமாகத் தடுக்கப்பட்டது தமிழ் நாளிதழான 'உதயன்' அறிக்கைகளின் படி பதுங்கு குழிகளில் புகுந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் உட்பட 9 பொதுமக்கள் இராணுவத்தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

பின்வாங்கிய இராணுவத்தினரின் இந் நடவடிக்கை ஒரு திசைதிருப்பு நடவடிக்கையாகவே இருந்தது. எல்லாத் தாக்குதல்களின் போதும் சிறீலங்காத் துருப்புகள் எதுவித எதிர்ப்புமற்ற சுதந்திரச் சூழலை அனுபவித்தனர். விமான எதிர்ப்பு ஆயுதங்களை வைத்திருக்காத புலிகளால் தீவிரமான தடுப்பு நடவடிக்கையைத் தவிர, வேறு எதையுமே செய்ய முடியாது என இந்தியா தீர்மானித்ததாகத் தெரிகிறது.

பின்வரும் - சம்பவம் சிறீலங்கா இராணுவத்தினரின் புதிய பயன் தேடும் நடவடிக்கைகள் பற்றி விளக்கியது. மே இருபதாம் திகதியளவில், வழிதவறிய மூன்று சிறீலங்காச் சிப்பாய்கள் தோட்டாக்கள் முடிந்த நிலையில் இடைக்காட்டுப்பகுதியிலுள்ள புலிகளின் இருப்பிடத்திற்குள் நுழைந்து விட்டனர். சரண்அடையும் விருப்பத்தைத் தெரிவித்த அவர்களைப் பொறுப்பேற்பதற்கு புலிகளில் லெப்டினன்ட் கோணேஸ் முன்வந்தார். அவர் உட்பட வெளியில் நின்ற நால்வரையும் சிறீலங்கா ஹெலிகொப்டரினால் அடையாளங் காணப்பட்டு. உடனடியாக ஹெலி தாக்குதலுக்குள்ளானதால் நால்வரும் ஸ்தலத்திலேயே மரணமானார்கள். ஹெலிகொப்டரில் இருந்தவர்களால், தமது சொந்த சீருடையையோ அல்லது இலக்கையோ சரியாக இனங்காண முடியாமல் போனதெனக் கூறமுடியாது. இச்சம்பவம் இருபத்தி நாலாம் திகதி 'வீக் என்ட்' வார இதழிலும் நிலைமை பற்றிய அறிக்கையில் ஊர்ஜிதப் படுத்தப் பட்டுள்ளது. இதில் கொல்லப் பட்ட அனைவரும் புலிகள் என பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது. ஆனால் புலிகள் ஒரு போதும் ஹெலிகொப்டர் தாக்குதலின் போது ஓரிடத்தில் அசையாமல் இருப்பதில்லை. லெப்டினன்ட் கோணேஸ் என்பவர் ஹெலிகொப்டரில் இருந்தவர்கள் தமது சொந்த தரப்பினர் மீது தாக்குதல் நடத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கையிலேயே வெளியே வந்திருக்க வேண்டும். ஆனால் அதிகாரிகளோ யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட படை வீரர்கள் தமக்குத் தொடர்ந்தும் சுமையாகவோ, மனச் சங்கடங்களை ஏற்படுத்துவதாகவோ இருக்கக்கூடாது எனத் தீர்மானித்திருக்க வேண்டும். கைதிகள் என்பது பத்திரிகைகளில் உறவினரால் வெளியிடப்படும் கவனத்தைக் குலைக்கும் வேண்டுகோள்கள் எனக் கருதப்பட்டிருக்கவேண்டும். ஏற்கனவே கைதாகியிருந்த பதினொரு சிறைக் கைதிகளின் உறவினர்களால் தேசிய பாதுகாப்பு அமைச்சர் பெருமளவு சிக்கலுக்குள்ளாகியிருந்தார். காலியைச் சேர்ந்த ஒருவரின் தகப்பனார் தேசிய பாதுகாப்பு அமைச்சரைப் பலமுறை சந்திக்க முயற்சித்து தோல்வியடைந்தமையினால் ரோமன் கத்தோலிக்க குருமாருக்கு விண்ணப்பித்திருந்தார். உணர்வு பூர்வமான எண்ணங்களைக் கொண்ட சிங்கள மக்களுக்கு தீய யுத்தத்தின் புதியஅம்சங்கள் ஏற்கத்தகாத ஒன்றாக இருந்திருக்க வேண்டும். இவையெல்லாம் நட்பவல்லுனர்களின் அணுகுமுறைகளில் ஒன்றே. அதிகாரத்தில் உள்ளவர்களைப் பொறுத்த வரையில் பெரியவிடயங்கள் கையில்உள்ளபோது அரை குறைக் கல்விகற்ற காலி மாவட்டக் குடியானவன் ஒருவனின் மகன் ஒரு பொருட்டா என்ன?

உண்மையான ஒப்பரேஷன் லிபரேஷன் தாக்குதல் மே மாதம் 26 ம் திகதி, தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சியின் வானொலி ஒலிபரப்பு யாழ் வானொலி ஒலிபரப்பாக மாறியதுடன் ஆரம்பமாகியது.

தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சியின் (T.E.C.P) வானொலி ஒலிபரப்பானது 1986 ம் ஆண்டு பிற்பகுதியில் மர்மமான முறையில் ஆரம்பமாகி சிங்களம் தமிழ் இரு மொழிகளிலும் செய்திச் சரங்களை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. மே மாதம் 26 ம் திகதி யாழ் வானொலியில் அதே குரல் ஒலிக்கும்வரை அது பலாலியிலுள்ள சிறீலங்கா இராணுவ ஒலிபரப்பாளர்களே தவிர வேறுயாருமல்ல என்பதை அறிந்துகொள்வது கடினமாகவே இருந்தது.

இந்த ஒலிபரப்பானது இயக்கங்களுக்குள்ளேயும் இடையேயும் என்ன நடக்கிறது என்பதைப்பற்றிய பெருமளவு உட் தகவல்களைக் கொடுத்து வந்ததால் மக்கள் இவ் ஒலிபரப்பைப் பொதுவாகக் கேட்டு வந்தனர். உச்சரிப்புகள் மாறுபட்டவையாகவும் இனங்கண்டு கொள்ளமுடியாதவையாகவும் இருந்தது. இவை சிலநேரங்களில் புலிகள் அல்லது ஈ.பி.ஆர்.எல்.எவ். இற்குச் சார்பானது போலவும், சிலநேரங்களில் புலிகளுக்கு எதிரானதாகவும் ஒலித்தது. முதன் முறையாக மாத்தையா,கிட்டுஆகியோருக்கு நடைபெறவிருந்த திருமணம் பற்றியும் வெளிப்படையாக அறிவித்தது. இந்த ஒலிபரப்பின் மூலத்தையும் பின்னணியையும் பற்றிப் பலவிதமான ஊகங்கள் இருந்தன. அவை எவ்வாறிருப்பினும் அது ஒருசிறந்த கேளிக்கையான ஒலிபரப்பாக இருந்தது.

யாழ் வானொலியில் அறிவிப்பாளர், சில சந்தர்ப்பங்களில் பழைய ஒலிபரப்பினையும் அடையாளங் காட்டிக் கொண்டார். மே மாதம் 26 ம் திகதி காலைநேர யாழ்.வானொலி ஒலிபரப்பும் அதன் உண்மையான நோக்கத்தைத் தெளிவுபடுத்தியது. குடாநாட்டிலிருந்த மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி,அகதிகள் புகலிடங்களாக அறிவிக்கப்பட்டிருந்த பல்வேறு தேவாலயங்களுக்கும், பாடசாலைகளுக்கும் செல்லும்படி அறிவிக்கப்பட்டது.

(தொடரும்)

> தகவல்கொடுப்பவர்கள் என புலிகளினால் கருதப்பட்டவர்களுக்கு கடும் தண்டனைகள் கொடுக்கப்பட்டது. புலிகளின் தகவல் தொடர்புச் சாதனங்களையும் அதன் தொலைக்காட்சிச் சேவையான 'நிதர்சனத்தையும்'அவதானித்ததன்மூலம் பாதுகாப்புப் படையினர் பெற்ற பெருமளவிலான தகவல்களைக் கண்டு புலிகள் ஆச்சரியமடைந்தனர். 'வீக் என்ட்' பத்திரிகையின், நிலமைஅறிக்கையின்படி நீண்டகால அவதானிப்பின் மூலம்புலிகளின் சங்கேதச்சொற்கள் உடைக்கப்பட்டதுடன் அவர்களுடைய கையெழுத்துக்களும் எந்தெந்த புலித்தலைவர்களுடையது என அடையாளங்கள் காணப்பட்டன.

> புலிகளால் சிறைக்கைதிகளாக்கப்பட்டிருந்த இராணுவத்தினரின் உறவினர்களால் தேசியபாதுகாப்பு அமைச்சர் பெருமளவு சிக்கலுக்குள்ளாகியிருந்தார். காலியைச்சேர்ந்த ஒருவரின் தகப்பனார் தேசிய பாதுகாப்பு அமைச்சரைப் பலமுறை சந்திக்க முயற்சித்து தோல்வி அடைந்தமையினால் றோமன் கத்தோலிக்கக் குருமாருக்கு விண்ணப்பித்திருந்தார். உணர்வுபூர்வமான எண்ணங்களைக் கொண்ட சிங்கள மக்களுக்கு தீயயுத்தத்தின் புதிய அம்சங்கள் ஏற்கத்தகாத ஒன்றாக இருந்திருக்கவேண்டும். இவையெல்லாம் நட்பவல்லுனர்களின் அணுகுமுறைகளில் ஒன்றே. அதிகாரத்தில் உள்ளவர்களைப் பொறுத்த வரையில் பெரியவிடயங்கள் கையில் உள்ளபோது அரைகுறைக் கல்வி கற்ற காலிமாவட்ட குடியானவன் ஒருவனின் மகன் ஒருபொருட்டா என்ன?

ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்.

EELAM PEOPLES INFORMATION CENTRE.

POST BAG - 5551
MADRAS - 600094
INDIA.

B.M. BOX - 1738
LONDON-WC1N-3XX
U.K.

POST FACH - 100206
4600 DORTMUND - 1
GERMANY.

P. BOX 6800
AGINCOURT
ONTARIO M1S3C6
CANADA.

BOITE NO - 69
7 - RUE RACINE
95140 - GARGES
FRANCE.

POST BOKS - 115
GROURD HAGENEN
0905 - OSLO - 9
NORWAY.

POST BOX - 52
LAVERTON
VICTORIA - 3028
AUSTRALIA.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரச்சாரச்செய்திப்பிரிவான ஈழ மக்கள் செய்தித்தொடர்பு நிலையத்தின் ஐரோப்பிய பிரிவினால் 'புதியபார்வை' வெளியிடப்படுகிறது.

படிப்பகம்